தென்றல்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

ஆசிரியர் : கண்ணதாசன்

ஆண்டு சந்தா 6—0—0
6 மாதச் சந்தா 3—0—0

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளி நாடு: மூன்றணு. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14

மலர் 1 | சென்னை | 8—1—1955 | சனிக்கிழமை | இதழ் 28

★ திராவிடத்தின் மாலங்கோவ் ! ★

★

"தாயக விடுதலை கடைச்சரக் கல்ல ! ஆயிரமாயிரம் வீரர்களின் குருதி பாய்ச்சப்பட்ட பிறகே விளை யக் கூடிய உன்னதத்தரு! குருதி யைக் கொட்டி அதை வளர்ப்போம். குதர்க்க வாதிகளின் கோணல் சேட்டைக்கும், ஆதிக்க வெறியர் களின் அடக்குமுறைக்கும் வளைந்து கொடாமல் 'தாயக விடுதலையே' எமது தாரக மந்திரம் எனக் கொண்டு, குருதி ஒரு சொட்டு உள்ளவரைப் போராடுவோம் ! ஏ ! அரசாங்கமே! எழுதி வைத்துக் கொள் உன் குறிப்பேட்டில். திரா விடம் வெகு விரைவில் விடுதலை கீதம் பாடப் போகிறது," என்ற லட் சிய முழக்கத்தை - உள்ள உறு தியை நாட்டோரே, நீர் கொள் வீரே"!

இது, சொல்லின் செல்வர்; செந் தமிழ்ச் செல்வம் சம்பத் அவர் களின் எழுச்சி முரசம்! உடலால் கரிபால்டி ! உள்ளத்தால் பிஸ் மார்க்! எழுத்தால் வால்டேர் ! பேச் சால் எட்மண்ட்பர்க்! உறுதியிலே மாவீரன் நெப் போலியன் : இவர் கள் அத்தனை பேரையும் சேர்த் தெடுத்த ஓர்உன்னத மனிதர்தான் நம் சம்பத் !

அள்ளிச்சேர்த்த அழகு தமிழ் வார்த்தைகளை 'கணீர்' என்ற குர லில் அரிந்து நிதானமாகப் பேசு வதில் நிபுணர் இவர் ! இவர் பேச் சிலே தென்றல் வீசும் ! உணர்ச்சி கொப்பளிக்கும் ; உத்வேகம் கூத் தாடும் ! எண்ணங்கள் அலைமோ தும் ! எழுச்சி, முரசொலிக்கும் ! இவர் சொல்லின் ஊற்று ! சமுதா யத்தின் கருத்துப் புரட்சியாளர்.

இந்த ஈரோட்டு விடி வெள்ளி - இயக்கத்தின் கொள்கை விளக்கு ! தங்கமணிக் குன்று ! தென்றலின் முகப்பிற்கு எழில் கூட்டுகிருர். களங்கமில்லா முழுநிலா அவர் முகம் ! புடம் போட்ட தங்கம் அவர் மேனி ! ஆனுல் உள்ளமோ சுட்ட வெண் சங்கு ! ஆம் ! அவ்வளவு தூய்மை ! அறிஞர் தம் இதய ஓடை யில் சம்பத் ஓர் இன்பப்படகு! எழுச்சி கொண்ட திராவிடத்தின் மாலங் கோவ் !

★

சமீபத்தில், திருச்சியிலும் ''நீதி நிர்வாகப் பிரிவினை'' நடைபெற்றது. நீதி நிர்வாகம் பிரிக்கப்படாமல் இருந்த ஒரு சில பகுதிகளில் திருச்சியும் ஒன்று. அங்கு, கடந்த 1-1-55ல் யன்று' நீதிபதி கோவிந்தமேனன் அவர்கள் பிரிவினையைத் துவக்கி வைத்தார்கள். இந்தச் செய்தி 'நீதியில் அக்கறை கொண்டவர்களுக்கு உண்மையிலேயே மகிழ்ச்சிதரும் செய்தியாகும். நீதியைப் பரிபாலிக்கும் அதிகாரியே, அரசாங்கத்துக்குச் சார்பான-ஊழியராக இருப்பதால் பல வழக்குகளில் நீதி தவறி விட ஏது உண்டு என்பதை எல்லோரும் ஒப்புவர். ''இன்ன வழக்கில் இன்ன தீர்ப்பு வழங்கு'' என்று நிர்வாக மேலிடம் கேட்டுக் கொண்டால், கீழே நிர்வாகியாகவும், நீதி பரிபாலகராகவும் வேலை பார்க்கும் அதிகாரி, தன் பதவியைக் காத்துக் கொள்ளவாவது பணிந்து போக வேண்டிய நிர்ப்பந்தம், 'இணைந்த' முறையில் இருந்தது. பிரிவினை, அந்த நிர்ப்பந்தத்தை ஓரளவாவது தடுக்கும். நடுநிலைமை தவறாத நீதி கிடைக்க வழியும் பிறக்கும். 'இணைந்த' முறையின் கொடுமைகளை,கொஞ்சம்உடனிருந்து கவனித்தோர் உணர முடியும்.

ஒரு வழக்கு நடக்கும்; அதில் அரசாங்கம் வாதியாகவும் அரசியல் வாதிகளில் எதிர்க்கட்சியாளர்களான சிலர் பிரதிவாதிகளாகவும் இருப்பர். இதை அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டோ, ''ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டோ'' நடத்துவர். அவர் வரம்புக்குட்பட்டு தீர்ப்புச் சொல்லப்படவேண்டிய 'செக்ஷன்' களில் அந்த வழக்கு நடக்கும். (செஷன்சுக்கு 'கமிட்' செய்யும் வழக்குகளில் நிர்பந்தம் இல்லை. செஷன்ஸ் நீதிபதி நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டவரல்ல.) இந்த நிலையில், அந்த வழக்கை போலீஸ் அதிகாரிகள், சர்க்கார் பக்கமிருந்து கவனிப்பர், இதில் வேடிக்கை, போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடும் டெபுடி கலெக்டராகவோ, ஜில்லா கலெக்டராகவோ அந்த மாஜிஸ்ட்ரேட்டோ, அல்லது வேறொரு மாஜிஸ்ட்ரேட்டோ இருப்பர். இப்படிப்பட்ட வழக்கில், பிரதிவாதி ''அம்போ'' என்று நின்று, மாஜிஸ்ட்ரேட்டுக்கு 'துணிச்சல்' இருக்குமா என்று எதிர்பார்த்து நிற்கவேண்டியிருக்கும். மந்திரி வந்தால் கூடவே ஓடும் நிர்வாக அதிகாரி, மந்திரிக்குப் பிடிக்காத எதிர்க்கட்சியாளருக்கு நீதி வழங்குவாரா என்ற சந்தேகம் பிறக்கும். சொல்லப்போனால், பிரதிவாதிகளுக்கு, நீதியில் நம்பிக்கை போய்விடும். இந்த இக்கட்டானநிலை 'இணைந்த' முறையில் இருந்தது. அரசாங்கத்தின் மூல கர்த்தர்கள் முழுக்க முழுக்க யோக்கியர்களாக இருந்தாலொழிய 'இணைந்த' முறையில் முழுநீதி கிடைப்பது சாத்தியமல்ல.

ஆகவே பிரிவினை மூலம், மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு ஓரளவாவது தெம்பு ஏற்பட்டு, நீதி வழங்க வாய்ப்புக் கிடைக்கிறது. போலீசார் பேச்சை முதலாவதாகவும் பிரதிவாதிகளின் பேச்சை இரண்டாவதாகவும், கவனிக்கும் முறைமாறுகிறது. சுருக்கினால் 'மாஜிஸ்ட்ரேட்டுகளின் கைவிலங்கு உடைபடுகிறது' சட்ட ரீதியான நியாயம் கிடைக்க வழிபிறக்கிறது.

திருச்சியில் நீதி-நிர்வாகப் பிரிக்கப்பட்ட செய்தி, நமக்கு மகிழ்ச்சி தருகிறது. சரியான நீதி வழங்கும் உயர்ந்த இடத்தில் உள்ளவரான, நீதிபதி கோவிந்தமேனன் இதை நடத்தி வைத்தது சாலச் சிறந்ததே'.

இந்த நேரத்தில், நீதிபதி கோவிந்தமேனன், மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குக்கூறிய ஆலோசனையையும் ஆராய்ந்து பார்க்க விரும்புகிறோம். அவர் சொன்னது இது:

''மாஜிஸ்ட்ரேட்டுகள், போலீசாரை நம்பாமல் இருக்கக்கூடாது'

இந்த யோசனையை, நியாய மனதுடன்தான் நீதிபதி அவர்கள் கூறியுள்ளார். என்றாலும், இதுவரை நடந்துள்ள முறைகளில் சிலவற்றை வைத்து, இந்த யோசனையையும் கவனித்துப் பார்க்க வேண்டும்.

போலீசார்' குற்றங்களைக் கண்டுபிடித்து வழக்கு நடத்துகிறார்கள் என்பதைக் காட்டிலும் வழக்குகளை உற்பத்தி செய்கிறார்கள் என்பது பொருந்தும். முழுக்க முழுக்க அல்ல என்றாலும் முக்கால் திட்டம் சொல்லலாம். நிறைய 'கேஸ்' பிடிக்காத போலீஸ்காரனுக்கு பதவி உயர்வு, கிடைக்காது என்கிற சம்பிரதாயம் கையாளப்படுகிறது' அரசாங்கத்தில் அதற்காக ஒவ்வொரு போலீஸ்காரரும் குற்றங்களைத் தேடி அலைகிறார்கள். புதுப்புது வழக்குகளை உற்பத்தி செய்கிறார்கள். நிழலையெல்லாம் பேயாக்குகிறார்கள். அசந்துமறந்து ஒரு அனாதை, பூட்டிக்கிடந்த கடையருகில் தூங்கினால் ஐம்பத்தொன்றும் செக்ஷன்படி சந்தேகத்தில் கைது'' செய்கிறார்கள். பிறகு அதே நிரபராதியை குற்றவாளியாக்க முயற்சிக்கிறார்கள். அவனையே 'ஒப்புக்கொள்ளும்படி'' நிர்ப்பந்திக்கிறார்கள். அவன் இணங்கவில்லையேல், சாட்சியங்களை உற்பத்தி செய்கிறார்கள். நீதிமன்றத்தில், அந்த வழக்கை அழகாக சோடிக்கிறார்கள். நீதிபதியையே குழப்பி விடுகிறார்கள். பொய்யுடையொருவன் சொல்வன்மையினால் மெய்யாகிறது; மெய்யுடையொருவன் சொல்லமாட்டாமையால் பொய்யாகிறது, நீதிபதியின் கண்களை, போலீஸ் சாட்சியம் கட்டி விடுகிறது. நீதிபதி 'சட்டரீதியாக' சாட்சியங்களை வைத்து, தண்டித்து விடுகிறார் ஒருமுறை இப்படி சிறைபுகுந்தவன், பிறகு விடுதலையாகி வந்தாலும் வெளியில் வெகுநாள் வாழமுடிவதில்லை. மீண்டும், யாராவது ஒரு போலீஸ்காரர், அவனைப் பிடிக்கிறார், அதட்டுகிறார். ''ஜாமினுக்கு ஆள் உண்டா?'' என்கிறார். இந்த நிலையில், அந்த ஆளை சிறையிலே கண்டவன்'' ''அவன் பழைய கைதி'' என்று போலீசாருக்குச் சொல்கிறான். மீண்டும் ''ஜாமீன் வழக்கு'' போடப்படுகிறது ஆளற்ற அந்த அனாதைக்குத் துணை போவார் கிடையாது. இரண்டாவது வழக்கில். அவனது முதல் தண்டனையே முதல் சாட்சியாக பரிணமிக்கிறது. மீண்டும் உள்ளே தள்ளப்படுகிறான். இப்படித் திரும்பத் திரும்ப நடைபெறுகிறது! ஒரு 'பழைய கைதி'யை மற்றொரு 'பழைய கைதி' காட்டிக் கொடுக்கிறான்; வேறு யாரும் கிடைக்காத நேரத்தில், காட்டிக் கொடுத்தவனையே போலீஸ்காரர் கைது செய்து ''ஜாமீன் வழக்கு'' போடுகிறார்! இப்படி, அனாதைகள் யாவரும், போலீசாரால் குற்றவாளிகளாக்கப் படுகின்றனர்.

நாங்கள் திருச்சி சிறையில் இருந்தபோது, கவனித்ததில், ''ஜாமீன் வழக்கு'' கைதிகள், சிறைக் கைதிகளின் மொத்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கு இருந்தனர். அவர்களில் பலர், தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று அழுதனர். அவர்கள் அத்தனை பேரையும் நம்பாமலிருக்க நியாயம் இல்லை, சிலர் குற்றம் செய்திருக்கலாம் முதலில். ஆனால் ''ஜாமீன் வழக்கு'' இரண்டாவதாக அதே நபர்கள்மீது போடப்படும்போது, அவர்களில் பெரும்பாலர் குற்றம் புரியும் எண்ணமே இல்லாமல் இருந்திருக்கின்றனர். அவர்கள் மீது வழக்குத் தொடுக்கக் காரணமாயிருந்ததெல்லாம், முதலில் அவர்கள் சிறையிலிருந்ததே! சுருக்கமாகச் சென்னால், ஒருமுறை சிறைபுகுந்த அனாதை, பிறகு வெளியில் வாழவே முடிவதில்லை. போலீசாரும் அடிக்கடி இவர்களைப் பிடித்துப் போடத் தவறுவதும் இல்லை!

செஷன்சில் எங்கள் தண்டனை உறுதி செய்யப்பட்டு நாங்கள் சிறையில் இருந்தபோது 'பி' வகுப்பில் வைக்கப்பட்டிருந்தோம். எங்களுக்கு கொடுக்கப்பட்டஊழியர்களில் (ஆர்டர்லி) 'குட்டையன்' என்பவனும் ஒருவன். அவன் தஞ்சாவூரைச் சேர்ந்தவன். ஜாமீன் வழக்கில் ஒரு வருடம் தண்டிக்கப்பட்டு உள்ளே வந்திருந்தான். நாங்கள் போன இருபதுநாட்களுக்கெல்லாம் அவனது ''விடுதலை தினம்'' வந்தது. சுமார் இருபது வயதுதான் இருக்கும் அவனுக்கு. ஆதி திராவிடத் தோழன். எங்களிடமெல்லாம் அவன் சிரித்த முகத்தோடு விடைபெற்றுக் கொண்டான் நண்பர்கள் அன்பில் தர்மலிங்கமும் ஐ. எம். ஷரீபும், அவனை அழைத்து உட்கார வைத்து, வேண்டிய புத்திமதிகளெல்லாம் கூறி, ஒழுங்காகப் பிழைத்துக் கொள்ளுமாறு கூறினர். நல்ல உடல் அமைப்பு அவனுக்கு; உழைக்கும் ஆசையும் ஏராளம்! அவன், தான், போய், புஞ்சைக் காட்டில் வேலை செய்யப் போவதாகக் கூறினான். நண்பர் தர்மு, அவனுக்கு வெளி உலகில் உதவி கிடைக்கச் செய்வதாகக் கூறினர். அதற்காக, 'இண்டர்வியூ'வுக்கு வந்த சில நண்பர்களிடமும் கூறினார். இந்த நிலையில் அவன், மகிழ்ச்சி பெருக்கெடுத்து ஓட, சிறைச்சாலைக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு நடந்தான். மறுநாள் விடுதலையை எண்ணி எண்ணி அவன் முதல் நாள் முழுதும் சாப்பிடவில்லை. விடுதலை பெற்று வெளியேறி விட்டான், ஓராண்டு இன்னல்களுக்குப் பிறகு, அந்த இளைஞன்!

சரியாக இரண்டே நாட்கள் கடந்தன. மூன்றும் நாள் காலையில் சுமார் பதினொரு மணிக்கு, நண்பர் தர்முவும், நானும், 'பி' வகுப்பு வார்டுக்கு முன்பு நின்று கொண்டிருந்தோம். ஒருவன், தலையில் அடித்துக் கொண்டு ஓடிவருவது தெரிந்தது. பக்கத்தில் வந்ததும்கவனித்தோம் அதே குட்டையன்!

''அடசண்டாளா! எங்கேடா திருடினே!'' என்று கேட்டார், நண்பர் தர்மு. அவருக்கு அவன் மீது கோபம்.

ஆனால் அவன் சொன்ன கதை, கண்ணீரை வரவழைத்து விட்டது. அவன் திருடவில்லை. விடுதலையானதும், அவன்போலீஸ்(Shadow) ''ஷேடோ''வின் கையிலேயே ஒப்படைக்கப்பட்டு, அவர் கையிலேயே, ரயில்வே இலவச வாரண்டும் கொடுக்கப்பட்டதாம். அந்த ''ஷேடோ''வும், அவனை தஞ்சாவூருக்கு அழைத்துப்போய், போலீசார் கையில் ஒப்படைத்து விட்டார். போலீசாரும் அவனை விடுவித்து விட்டனர். பத்து அடி தூரம் அந்த இளைஞன் சுதந்திரமாக நடந்தான். ஓராண்டு காலத்துக்குப் பின் அப்பொழுதுதான் அவன் சுதந்தரமாக நடக்கிறான். அந்த சுதந்திரம் சில விநாடியே தான்! பின்னாலிருந்து ஒரு போலீஸ்காரர் ''ஏய்!'' என்று அதட்டினார்! இளைஞன் நின்றான். ''உன்மேல் இன்னும் ஒரு வழக்கிருக்கிறது! வா!'' என்று அழைத்துப்போய் உட்கார வைத்துவிட்டார். பிறகு மறுநாள், 'ரிமாண்ட்' எழுதி திருச்சிச் சிறைக்கு அனுப்பிவிட்டார் அப்போது அவன் 'ரிமாண்ட்' (Remand) கைதி!

''ஒழுங்காக வாழவிடமாட்டேங்குறாங்களே, சாமி! என்ன சாமி செய்வேன்! இனி, ஆயுசுபூரா ஜெயிலுதானு, சாமி! ஐயோ'' என்று தலையில் அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தான்! ஆற்றுவார் யார், அந்த அனாதையை! சிறை நீங்கிய மறுநாளே அவன் குற்றம் செய்வான் என்று கூறமுடியுமா? எவ்வளவு பெரியதிருடனும், விடுதலைக்குப்பின் கொஞ்சமாவது ஓய்வு கொள்வானே!

இதற்கெல்லாம்காரணம்என்ன? போலீசார்தான்! பதவி உயர்வு—குற்றம் கண்டு பிடித்ததற்கு (Reward) 'ரிவார்டு'—இந்த இரண்டும் அவர்களை,குற்றவாளிகளை உற்பத்தி செய்யச் சொல்லுகிறது. அதனால், பலர் பரம்பரைக் கைதிகளாகி விடுகின்றனர். ஒரு முறைக்கு மறுமுறை தண்டனை அதிகம்! இந்த நிலையை மாஜிஸ்ட்ரேட்டுகள் ஆராய வேண்டும். கனம் நீதிபதிகோவிந்தமேனன் அவர்களுக்கும் இது தெரியாததல்ல. முழுக்க போலீசார் பேச்சைத் தள்ளிவிடக்கூடாது என்ற கருத்தில்தான் அவர்இதைக்கூறியிருக்க வேண்டும் என்று கருதுகிறேன். குற்றம் செய்வோரும் உளர்; என்றாலும் அவர்கள் திருந்துவதற்குச் சந்தர்ப்பமே கொடுக்கப்படுவதில்லை. நீதிபதியின் கூற்றிலுள்ள உண்மையை உணர்ந்து, போலீசார் சொல்வதை முழுக்க ஏற்றுக் கொண்டு விடாமலும், முழுக்கத் தள்ளிவிடாமலும் மாஜிஸ்ட்ரேட்டுகள்; வழக்கை ஆராய்தல்வேண்டும் என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

கடற்கன்னியும்-காவலனும்!

அவள் கடற்கன்னி..கடற்கன்னி என்றவுடன் நீங்கள் பாதி மீனுருவமும், பாதி பெண்ணுருவ மாகவும் கற்பனைசெய்து விடாதீர்கள். அவள் பெண்தான் ... உங்களையும் என்னையும் போன்ற மானிடப் பெண்தான்! இன்னும்ஆணையிட்டு வேண்டு மானாலும் சொல்கிறேன், அவள் மச்சாவதாரத்திற்கு நிச்சயமாக பிறக்கவேயில்லை. காலையிலே மீன்வலையைத் தோளிலேமாட்டிக்கட்டுமரத்திலேறி கடற்மேற் சென்று அன்றாட வாழ்க்கைக்கு வழி தேடும் மீனவர் பெருங் குடிமகனின் திருவளர்ச் செல்வியே அவள்! பூங்காவிலே உலாவி, பொய்கையிலே நீராடி மாடியிலே வாசம் செய்து, மலர் படுக்கையிலே உறங்கும் அரசகுமாரியல்ல அவள்! அவளின் தோழி கூறுவது போல எப்போதும் புலவு நாற்றத்தை வீசும் மேனியையுடைய செம்படவ குலப் பெண் ... ...

ஆனால் அவளைக் காதலித்தானே அவன் அந்த ஆணழகன் யார், எப்படிப் பட்டவன், எக்குடியினன் அதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டாமா ?

அவனோ மாமன்னனின் காதற் புதல்வன். மாபெரும் நாட்டின் எதிர்கால மன்னன். அவன்பிறந்த போது இன்னிசை முழங்கி, நாடே திரண்டது. எங்களின் எதிர் காலத் தலைவன் பிறந்து விட்டான் என்று மக்கள் எக்காள மிட்டனர். பிறந்த நாள் பரிசாக பெரும் பெரும் பொருள்களைக் கொண்டு வந்து குவித்தனர். தாதியர் தாலாட்ட பாணர் யாழிசைக்க, விறலியர் இன்னிசைபொழியதங்கத்தொட்டிலிலே துயின்றான். பளிங்குக்கல் மேடையிலே அவன் தவழுங் காலம் உற்றபோது தவழ்ந்தான். அவன் நடை பயில்வதற்கு மணி வைத்திழைத்த நடை வண்டி தரப்பட்டது. அவனது தாய், அந்த மானிலத்தின் அரசி அவனை இடுப்பிலே சுமந்து எழிற் நிலவைக் காட்டி பொற் கிண்ணத்திலே பிசையப்பட்ட பாலமுதை ஊட்டினாள். அவனும் இத்தகு போக வாழ்வில் நாளொரு மேனியும் பொழுதொரு வயதுமாக வளர்ந்து கல்வி கலை பயின்று கண்டோர் காமுறும் கட்டழகனாக விளங்கினான். ஆனால் என்ன கால வித்தியாசம் பாருங்கள் ! ஒரு மானிலத்தின் இளவரசனாக பிறந்தும் கூட அவனுக்கு ஒருகாதலி அங்கெங்கும் கிடைக்காது மீனவர் குடி மகளைத் தேடி வந்து விட்டானே !

சரி, போகட்டும். அவன் தான் தன் நிலை தகுதி, இடம் கருதாது, கருதினாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாது 'கண்டதும் காதல்' என்ற முறையில் கட்டமைந்த உருவத்தாள் காதற் செய்யும் பருவத்தாள், தத்தை மொழி இன்சொல்லாள், தளிர்மேனிசாயலாள், என்ற வர்ணனைகளுக் கெல்லாம் ஏற்றவளான கடற்கன்னியின் மீது காதல் கொண்டு விட்டான். அவளை மறக்க முடியாத உன் மத்தனாகி விட்டான். அவளைச் சுற்றித்திரியும் நகைப்புக் குரியவனாகி விட்டான்.

அதற்காக அவனை நையாண்டி செய்யும் முறையில் ஓட ஓட விரட்டுவதா ? அவனின் உயர் நிலையை எடுத்துக் காட்டி 'உடிக்கேற்றவனல்லஎம்மவள், போய்வாருமையா என்று அவனது உள்ளப் புண்ணிலே வேல் கொண்டு பாய்ச்சுவதா ? சே...சே...பெண்களே மிகப் பொல்லாதவர் களப்பா !

அவனோ அவளை மிகமிகத் தீவிரமாகக் காதலிக்கிறான்...அவளோ கூறவே வேண்டியதில்லை தாய் தந்தையரிடம் மீனை உலர்த்தச் செல்வதாகக் கூறிவிட்டு தனியிடத்திற்கு வந்து மீன் உலர்த்தும் பாவனையில் நாற்புறமும் தன் கண்களைச் சுழட்டி இளவரசனின் தேர் எங்கே வருகிறது, எங்கே வருகிறது என்றுதானே, சதா பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவனைக் கண்ட போது அவளின் கூந்தல் அவிழ்கிறது, உடை நெகிழ்கிறது! சங்கு வளையல் கழல்கிறது. கண்கள் மகிழ்ச்சியை அள்ளி வீசுகிறது. ஆனால் காணாத போதோ அவள் மேனியில் பசலை படர்கிறது. பார்க்குமிடமெல்லாம் சூன்யமாய்தோன்றுகிறது. ...

இருவர் நெஞ்சமும் ஒன்று கலந்து விட்டதால், ஏறக்குறைய இருவர் நிலையும் ஒன்றாகவே யுள்ளது. இனி அவர்களை யாராலும் பிரிக்கமுடியாது. மானிலமே திரண்டெழுந்தாலும் கூட அவர்களின் காதலுக்குஊறு விளைக்க முடியாது.

அப்படியிருக்க இவள் யார் ? இப்படி நடுவிலே வந்து வேதாந்தம் பேசும் இப்பேதை மகள் யார் ?

அவள் தானையா தோழி ! தலைவியிருக்குமிட மெல்லாம் அவளைத் தாங்கி நிற்க ஒரு தோழி யிருப்பது எப்படியோ அகற்ற முடியாத பண்பாடாகி விட்டது. அவள் தான் இப்படி காதலர்களின் நடுவிலே புகுந்து தகுதி திறமை பேசுகிறாள்· சில சுடு மொழிகளையே எடுத்து வீசுகிறாள். பாவம், மற்றுமொரு சாகுந்தலத்தை வேறொரு காளிதாசன் இயற்றாமல்இருக்க வேண்டுமே என்பதில் தான் அவளின் கவலை முழுதும் அடங்கியிருக்கிறது. ஆகவே தான் காதலியைக் கண்டு பேச வந்தவனிடம், திருமணம் செய்து கொள் என்று துணிவாகச்சொன்னவனிடம் பின் வருமாறு கூறுகிறாள்.

இவளே, கானல் நண்ணிய காமர் சிறு குடி
நீல் நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீனெறி பரதவர் மகளே
நீயே, நெடுங் கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே
நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ
புலவு நாறுதும் செல நின்றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மோடு புரைவதோ அன்றே
எம்மனோரில் செம்மலு முடைத்தே.

“ஐயா இளவரசே, இவள் உம்மைப் போல் கொடி கட்டியாளும் கொற்றவன் மகளல்ல, அகன்ற கடை வீதிகளையும், பரந்த நிலப் பரப்பையுமுடைய பார்த்திபன் புதல்வியல்ல, இவளிடம் தேரோ குதிரையோ இல்லை, சர்வ சாதாரணமான மீனவர் குடி நங்கை. அழகிய மாளிகையோ, அத்தாணிமண்டபமோ கண்டறியாதவள். சிறு குடிலில் வாழ்பவள் , நீர் மலை; இவள் மடு ! அங்ஙனமிருப்ப இவளை நீர் எங்ஙனம் மணம் புரிதல் கூடும்? மேலும் தன் குலத் தொழிலாகிய மீனைக் காய வைக்கும் தொழிலைச் செய்தலால் எப்போதும் இவளிடம் புலவு நாற்றம் வீசிக்கொண்டிருக்கும். இதனை நீர் பொறுக்க வல்லீரோ ! இயலாது! இயலாது. கடல் நீரை எம் விளைவயலாகக் கொண்டு சிறு வாழ்க்கை வாழும் நாங்கள் உம்போன்ற உயர் வாழ்க்கை உடையவர்க்குஏற்றவர்களல்லோம். நீரும் எங்கள் குடியில் பிறக்கவில்லை. ஆகவே எம் செல்வியை மறந்து சென்று வாருமையா, இவளுக் கேற்ற கணவன் எங்கள் மரபிலேயே உள்ளான்” என்றாள்.

தோழியின் கூற்றைக் கேட்டு அரசகுமாரன் சென்று விடுவானா, அல்லது மறந்து தான் வேறொரு மங்கையை நாடிச் செல்வானா ? அவனும் தற்கால காதல் ஜோடிகளைப் போல் வானளாவ தன் காதலின் உறுதியை எடுத்துக் கூறி இந்த வையமே நிலை மாறினாலும் தன் காதல் மாறாது, காதலுக்கு உயர்வு தாழ்வு ஏது? குலம் கோத்திரம் ஏது? என்றெல்லாம் சொற்களை வாரி வீசியிருக்க மாட்டானா ? அதற்குப் பின்னும் தோழி நிற்பாளா என்ன? ஏன் நிற்கப் போகிறாள்...அவள் தான் முன் கூட்டியே தன் தலைவியோடு கூடிப் பேசி, திட்டம் தீட்டி ஒரு நாடகம் ஆடினாளே ! அப்படி குறுக்கே நின்றாலும் இளவரசன் விட்டு விடப் போகிறானா என்ன? களவு மார்க்கமாக கன்னியைக் கொண்டுச் செல்ல அவனிடமும் திட்டம் தயாராகவேயிருக்கிறது. வாழ்க கலப்பு மணக் காதலர் !

மேற்படி கருத்தமைந்த அழகிய பாடல் சங்க நூல் நற்றிணையில் காணப்படுகிறது. பாடலைப் பாடியவர் பெருங் கௌசிகனார்

—வி. கலைமணி (B.A. Hons.)

சிறுபொருள் விளக்கம் : 7

★ மஞ்சள் ★

இது இந்திய உபகண்டத்தில் வெப்பமான பாகங்களில் பயிராகும் செடி. இதன் கிழங்கிற்கு மஞ்சள் என்று பெயர். இதற்கு ஒருவித வாசனையுண்டு.

மஞ்சள் இருவகைப்படும்: 1. கறுப்பு மஞ்சள், 2. கறிமஞ்சள்.

கறுப்பு மஞ்சள்—கிழங்கின் பெரும் பாகங்களை எடுத்து உலர்த்தி நல்லெண்ணெயில் பக்குவஞ் செய்யப் பெறுவது.

2. கறிமஞ்சள்—கிழங்கின் பக்கங்களில் கிளைக்கும் விரல்போல உள்ளவைகளை வேறுபடுத்தி சாணப்பாலில் வேக வைத்துப் பக்குவப்படுத்துவது.

பாதார்த்தம் உபயோகம்:—கிழங்கு.

சுவை:—கைப்பு, கார்ப்பு, வீரியம் வெப்பம், பிரிவு—கார்ப்பு.

செய்கை — அகட்டுவாய்வகற்றி—உவரவாத ஆரி — **Carminative.** வெப்பம் உண்டாக்கி — உஷ்ணகாரி **Stimulant.**

குணம்:—உடலுக்கு மேனி தரும். உடலில் பூச, புலால் நாற்றத்தை நீக்கும். புருட வசியமும், பசியும் உண்டாக்கும். வாந்தி, வாத—பித்த — கபதோடம், தலைவலி, நீரேற்றம்,பிரமேகம், பீநசம், ஐவகை வலி, வீக்கம், வண்டு கடிவிடம், பெருவிரணம் இவை போம்.

வழக்கு:—மஞ்சளை நீர் விட்டரைத்து உடலில் பூசி நீராட, தேகத்தில் உண்டான நீங்காத புலால் மணம்—(துர்நாற்றம்) நீங்கும் உடல் பொன் சாயலான மேனி பெறும். மேலும் கற்றாழை நாற்றமும், முகத்திலுண்டாகின்ற ரோகமும் சீரண சிலேத்துமமும், வியர்வையும் நீங்கும்.

மஞ்சளைப் பொடித்துப் புண்களின் மீது தூவ அவைகள் ஆறும்.

சாதத்துடன் மஞ்சளைச் சேர்த்தரைத்துக் கட்டிகளின் மீது வைத்துக் கட்ட அவைகள் எளிதில் பழுத்து உடையும்.

மஞ்சளைச் சுட்டு முகர, நீரேற்றம் நீங்கும்.

வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்து அரைத்து அம்மைக் கொப்புளத்தின்மீது பூச, அவைகள் பழுத்து உடைவதன்றி வெகு எளிதில் ஆறிப்போகும்.

மஞ்சளுடன் ஆடாதோடையிலை சேர்த்துப் பசுவின் மூத்திரத்தை விட்டரைத்துப் பூச சொறி, சிரங்கு, நமைப்புடைகள் ஒழியும்.

மஞ்சள் அரைப்புடன் சுண்ணாம்பு பொட்டிலுப்பு கூட்டி சுடவைத்து சுளுக்கு, சருமச் சிதை, இவைகட்குப் பூசலாம்.

பச்சை மஞ்சள் இரசத்தைப் பூச அட்டை விடம், நூதன காயப்புண், சருமச்சிதைவு நீங்கும்.

மஞ்சள் சூரணத்தில் அ-கல குன்றியளவு உட்புகட்ட வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, மாறல் சுரம் நீங்குவதுடன் குடல் பலப்படும்.

மஞ்சள் நீரை யருந்த காமாலை குணமாகும்.

மஞ்சளை அரைத்து நீரில் கலக்கி வெண்சீலைக்குச் சாயமேற்றி அதை ஆடையாக உபயோகித்தால், வாத நீர்ச்சுருக்கு, இருமல், விடசுரம், மாறாத்தினவு, தனிச்சுரம், மலபந்தம் இவை நீங்கும்.

மஞ்சள் நீரில் ஒரு சிறிய வெண் சீலைத்துண்டை நனைத்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு கண் நோய் உள்ளவர்கள் இச்சீலையைக் கொண்டு அப்போதைக்கப்போது துடைத்துவரக் கண்சிவப்பு, கண்ணருகல், கண்வலி, கண்ணில்-நீர் கோத்தல் போன்றவை சாந்தப்படும்.

மஞ்சள் தாள் மூத்திரத்தில் சிவந்தால் நீரில் உப்புயிருக்கின்றதாக நிச்சயிக்கலாம்.

கறிமஞ்சள்

மக்கள் உபயோகிக்கும் பற்பல ஊறுகாய்களிலும், கறிமசாலைகளிலும், இது ஏராளமாய்ச் சேருவதுடன், சிற்சில பதார்த்தங்களின் துர்க்குணத்தை மாற்றி அவைகள் பார்வைக்கு அழகுபடவும் இது வழங்கப்பட்டு வருகிறது.

பொங்கல் வாழ்த்து

கழகத் தலைவர்களின் படங்களும், பொன்மொழிகளும் கொண்ட மூவண்ண, இருவண்ண பொங்கல் வாழ்த்துகள் ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்பட்டவை கிடைக்கும்.

விபரங்களுக்கு :-

சாந்தி வெளியீடு

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி.

முத்தமிழையும் வளர்த்து எத்திசையும் புகழ் விளங்க ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களின் பரம்பரையிலே தோன்றிய குலசேகர பாண்டியனின் வரலாறு என் உள்ளத்தை உருக்கியது. எனவே, ஆர்வத்தோடு அதைப் படித்தேன். படித்து முடிந்ததும் மாட்சியோடு வாழ்ந்த மன்னன் குலசேகரனின் வீழ்ச்சியை எண்ணி எண்ணி என் மனம் குமுறியது. என் மனத்திரையிலே குலசேகரனைப் பற்றிய எண்ணங்கள் படமாக ஓடின.

உ

காவிரிக்குக் கரைகண்ட கரிகாலன் முதல் பல மன்னர்கள் ஆண்ட சோழப் பேரரசு குலசேகரன் வசமாயிற்று. வதும்பர்களும், துளும்பர்களும் குலசேகரன் அடி தொழுது நின்றனர். கற்புக்கரசி கண்ணகியால் தன் நீதி, நிலை தவறியது உணர்ந்து அது பொழுதே உயிர் நீத்தானே உத்தமன் நெடுஞ்செழியன். அவன் இருந்து ஆட்சி செய்த அரியணையிலிருந்து குலசேகரன் ஆட்சி செலுத்திவந்தான். குலசேகரன் வெற்றிப் புகழ் எங்கும்பரவியது.

ஈடும் எடுப்புமற்றுத் திகழ்ந்த குலசேகரனுக்கு இரு மனைவியர். அவன் மூத்த மனைவி அரச குடும்பத்துப் பெண், அரியணை ஆளும் மன்னன் மகள், என்றாலும், அவன் அகத்தை அவள் கவரவில்லை.

குலசேகரன் அகத்திலே நிறைந்த அன்பையெல்லாம் இளைய மனைவி பூங்கொடியே ஆட்கொண்டிருந்தாள். பூங்கொடி அழகும், அறிவும், அன்பும் ஒருங்கே நிறைந்த உத்தமி. எனவே குலசேகரன் உள்ளம் அவள் பால் சென்றதில் வியப்பில்லையல்லவா ?

இந்த நிலையில் மன்னன் மனைவியர் இருவருமே கர்ப்பமுற்றனர். இருவரும் ஆண் மக்களையே ஈன்றனர். மூத்தாள் பெற்ற குழந்தைக்குச் சுந்தர பாண்டியன் என்றும், இளையாள் பெற்ற குழந்தைக்கு வீரபாண்டியன் என்றும் பெயர்கள் சூட்டப் பெற்றனர்.

நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் ஆண்டுகளாக மாறி ஓடி மறைந்தன. மக்கள் இருவரும் வாலிபப் பருவத்தை அடைந்தனர். குலசேகரன் இருவரிடமும் வேறுபாடு இன்றிச்சம அன்பு காட்டி வந்தான். மன்னன் மாறுபாடு காட்டவில்லை என்றாலும் மக்கள் வேறுபாடு காட்டத் தவறவில்லை. அரண்மனையிலே, அந்தப் புரத்திலே, அழகிகள் கூட்டத்திலே, ஆடவர் குழுவிலே எங்குமே சுந்தர பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றிக் கூசாது பேசினர். மன்னனும் இதையறிந்தான். ஆனால் இயற்கையாக அமைந்து விட்ட ஒன்றை அவன் தான் எவ்வாறு மாற்ற இயலும் ?

வீரபாண்டியனை அவன் தாய் வீரனாகவே வளர்ந்தான். அவனும் வீரனாகவே வளர்த்தாள். ஆனால் அரசியின் கவனக் குறைவால் பின் அரசாள வேண்டிய மகன், ஆற்றல் பெற்றுத் திகழ வேண்டிய மைந்தன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனும் இருந்து ஆட்சி செய்த அரசை அலங்கரிக்கப் போகும் இளவரசன் சுந்தர பாண்டியன் கோழையாக, சோதாவாகத் தன்னலமே பெரிதென எண்ணும் சுயநலக்காரனாக வளர்ந்து வந்தான். மறைத்து வைக்க முடியாத இந்த வேறுபாடு பற்றித்தான் மக்கள் பேசினர். வருங்கால ஆட்சி சுந்தரன் பால் கிடைத்தால் நாடு நலிவடையுமே என்று மனம் நொந்தனர்.

சிறுகதை

வாழும் கூட்டம்

மக்களுக்காகவே வாழ்ந்தமன்னனும் எதிர் காலத்தைப் பற்றி எண்ணியெண்ணி மனம் நொந்தான். வீரரும், தீரரும் இருந்து விளக்கம் பெறச் செய்த பாண்டிய நாடு இன்று வீரமற்றவன் கையில் மக்கள் நலமே தன்னலம் என்று எண்ணும் ஆற்றலற்றவன் கையில் சிக்கிச் சிதைவதைப் பெரு வீரனான குலசேகரன் எப்படி வரவேற்க முடியும் ? சிறந்த வீரனாக இருந்ததோடு சிந்தனைச் சிற்பியாகவும் திகழ்ந்த குலசேகரன் மக்கள் வாழப் புரட்சிகரமான ஒரு திட்டம் தீட்டினான். வழி வழியாக வந்த முறை என்ற பேரில் தன் முன்னே நின்ற சடங்கைத்தகர்த் தெறிந்தான். தானொரு அரசியல் நிபுணன் என்பதை நிரூபித்தான். சுந்தர பாண்டியன் பட்டத்தரசியின் மகன், வீரபாண்டியனைவிட மூத்தவன் என்றாலும் முடிவாகத் தனக்குப் பின் வீரபாண்டியனே ஆட்சிக்கு வர வேண்டும் என்று தன் திட்டத்தை வெளியிட்டான். மக்கள் மகிழ்ந்தனர். மகத்தான செயலைச் செய்தான் எனப் புகழ்ந்தனர். ஆனால் ஒருவன் மட்டும் எதிர்த்தான். அவன் தான் அரசகுரு பட்டாச்சாரி. மன்னன் தவறான இந்தத் திட்டத்தைக் கை விட்டு விட வேண்டும், என்று பட்டாச்சாரி கூறினான். அதற்கு அவன் காட்டிய காரணங்கள் நாம் அறிந்தவை தானே ! வழி வழி வந்த முறை ! மூத்தவனே பட்டத்திற் குரியவன் ! வீரபாண்டியனைப் பட்டத்திற் குரியவனாக்கினால் பாபமும் பழியும் ஏற்படும், பரமன் மனம் நோகும் என்பவைகள் தான் அவை !

பட்டாச்சாரிக்கு வீரபாண்டியனை எப்பொழுதுமே பிடிப்பதில்லை. அரசகுருவுக்கு ஆண்டவனைப் பற்றிச் சிந்தனை இருக்க வேண்டுமே தவிர, அரசியலைப்பற்றிச் சிந்தனை இருக்கக் கூடாது என்று வீரபாண்டியன் கருதி வந்தான். மேலும் அரசகுருவுக்கு அரண்மனையில் அளவுக்கு மீறி அதிகாரங்கள் இருக்கின்றன என்பதும் அவன் எண்ணம். வீரபாண்டியன் இவற்றை வெளிப்படையாகவே கூறி வந்தான். இவற்றோடு அவன் தாய் மொழியாம் தமிழ் மொழிமேல் தாழாத பெரும் காதல் கொண்டிருந்தான். பல்வேறு காரணங்களால் பட்டாச்சாரி வீரபாண்டிய தன் வைரியாகவே கருதி வந்தரன், வீரபாண்டியனுக்கே அரசுரிமை என்றதும் பட்டாச்சாரியின் மனம் பதறித் துடித்தது தனது திறமைகளையெல்லாம் காட்டி மன்னனைத் தன் வழிப் படுத்த முயன்றான்- முடியவில்லை ! எனவே பட்டாச்சாரியின் ஆத்திரம் கரை புரண்டது. தான் எண்ணியபடி நடக்காத காரணத்தால் அவமானம் அவனைப் பிடுங்கித் தின்றது. அவன் உள்ளத்திலே தீய எண்ணங்கள் பல ஒன்று கூடின, மீன் குஞ்சுக்கு யார் நீச்சல் கற்றுக் கொடுக்கிறார்கள் ? அது போல வழி வழியாக வஞ்சம் செய்தே வாழும் மரபில் பிறந்த பட்டாச்சாரியும் வஞ்சம் செய்வதையே தன் குறிக்கோளாகக் கொண்டான்.

தன் எண்ணத்தை எவ்வாறு நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று பட்டாச்சாரி சிந்தித்தான். சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலற்ற சோதா சுந்தரபாண்டியன் மூலமே நிறைவேற்றிக் கொள்வதென முடிவு செய்தான். அவனைக் கண்டு 'அரசனாகும் உரிமை உனக்கே உரியது. அதை மாற்ற யாருக்குமே உரிமை கிடையாது. இரவு கனவில் வந்து ஆண்டவன் கூட அப்படித்தான் கூறினார் உனக்கே உரிய அரச பதவியை ஒரு சிறுவன் அடைவதை யெண்ணி என் உள்ளம் எரிகின்றது. எண்ணிப்பார் ! இந்தச் சூழ்ச்சிக்குக் காரணம் அந்தக் காதகி, உன் சிற்றன்னை ! அவள் கடைக்கண் வீச்சிலே உன் தந்தை கருத்தை யிழந்து விட்டான். ஆண்டவனின் தூதுவன், அரசகுரு என் பேச்சையே யெடுத்து எறிந்து விட்டான். பெற்ற தந்தையே உற்ற மைந்தனுக்குத் தீங்கு செய்கின்றான். பழி ! பெரும் பழி ! பாண்டி நாடு காணாத மாபெரும் பழி ! தந்தையே மகனென எண்ணாத போது நீயேன் தந்தையெனக் கருத வேண்டும்'' பட்டாச்சாரி தன் சூழ்ச்சியை நிறைவேற்ற அழகாகப் பேசினான். அறிவற்ற சுந்தரபாண்டியனும் நம்பினான். ஆத்திரமடைந்தான். தந்தையைத் தூற்றினான். ஓரிரு நாட்களிலேயே சுந்தரபாண்டியனைப் பட்டாச்சாரி தன்வசமாக்கிக் கொண்டான்.

மதுரை நகரமே சோகத்தில் ஆழ்ந்து கிடந்தது. எத்திசையும் புகழ வாய்ந்த எந்தல் மக்கள் நலமே பெரிதென எண்ணிய மன்னன் குலசேகரன் குத்தப் பட்டு மாண்டு போய்விட்டான்! வியப்பிற்குரிய செய்தி, திகைப் பிற்குரிய நிகழ்ச்சி நடந்து விட்டது! பட்டாச்சாரியின் எண்ணம் பலித்து விட்டது ! சுந்தரபாண்டியன் சூழ்ச்சிக் காரனின் திட்டத்தை நிறைவேற்றி விட்டான். இந்த நிலையில் மன்னனைக் கொன்றவன் வீரபாண்டியனே என்ற பெரும் பழிச் செய்தியைப் பட்டாச்சாரி யெங்கும் பரப்பத் தொடங்கினான். நிலைமையை உணர்ந்த வீரபாண்டியன் இனி இங்கிருப்பின் பழியோடு அழிய நேரிடும் என்று எண்ணி, பட்டாச்சாரியை யெப்படியும் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தலைமறைவாக உலவத் தொடங்கினான். இதே சமயத்தில் வட நாட்டு மகமதிய வேந்தன் மாலிக்கபூர் படையெடுத்து வந்து பாண்டிய நாட்டைத் தன தாக்கிக் கொண்டான். அவன் ஆட்சியிலே எட்டாண்டுகள் மக்கள் பட்டதுன்பம் சொல்லி முடியாது. ஆனால் அப்பொழுது பட்டாச்சாரி வாழ்ந்தான். அவன் கூட்டம் வாழ்ந்தது.

செங்குட்டுவன் காலத்திலே மாடல மறையவன் வாழ்ந்தான். அவன் கூட்டமும் வாழ்ந்தது. இராசராசன் காலத்திலே மூவாயிரம் குடும்பங்கள் தஞ்சை நகரிலே குடியேற்றப் பட்டது. அவன் காலத்திலும் அந்தக் கூட்டம அக மகிழ்ந்து வாழ்ந்தது. குலசேகரன் காலத்திலே பட்டாச்சாரி வாழ்ந்தான். மக்கள் மனம் நொந்து வாடிய போதிலும் அவன் கூட்டம் வாழ்ந்தது. அந்தக் கூட்டம் வந்தது முதல் வாழும் கூட்டமாகவே வாழ்கிறது. வாழ்ந்த கூட்டம் வீழ்ந்து விட்டது ! வந்த கூட்டம் வாழ்கிறது !

இத்தகைய எண்ணங்கள் என்னைச் சூழ்ந்ததால் என் மனம் அவமானத்தால் குன்றியது. ஐயோ! தமிழகமே உன்னை, உன் வாழ்வை வளத்தை வீழ்த்திய கூட்டத்திற்கு என்றுமே அடி பணிந்து தான் வாழ்வாயா ? என்று நானே என்னைக் கேட்டுக் கொண்டேன் !

இந்தச் சமயத்தில் என் மனைவி கனிமொழி வந்து சேர்ந்தாள். "என்ன அத்தான் ! தூக்கமோ?" என்று அன்போடு கேட்டாள். ஆற முடியாத, தேற முடியாததைப் பற்றி யெண்ணும்பொழுதா தூக்கம் வரும் ?" அவளுக்கு எப்படித் தெரியும் என் மனவேதனை ?" அத்தான் இதோ பாருங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்! அப்பொழுதே வந்து விட்டன, மறந்து விட்டேன்" என்று என் அருமை மனைவி கூறினாள். பல வாழ்த்துக்கள் வந்திருந்தன அவற்றிலெல்லாம் தமிழ் பொங்கிற்று! இன்பம் பொங்கிற்று! எழுச்சி பொங்கிற்று ! ஒரு வாழ்த்திலே அறிஞர் அண்ணாவின் அழகிய படம் அச்சிடப் பெற்றிருந்தது. அண்ணாவின் முகத்திலே தம்பிகள் பால் கொண்ட தழாத நம்பிக்கையால் பெருமிதம் பொங்கிற்று! "அத்தான் ! பால் பொங்குகின்றது வாருங்கள், என்று என் மனைவி அன்போடு அழைத்தாள். அவள் மலர் முகத்திலே மகிழ்ச்சி பொங்கிற்று. தமிழகத்துக்குயவன் செய்த பானையிலே அமிழ்தமெனப் பால் பொங்கிற்று ! எங்கும் எழுச்சி! சோர்ந்த என் உள்ளத்திலே உணர்ச்சி பொங்கிற்று. ஆம்! தமிழகம்விழித்துவிட்டது. வாழ்ந்த இனம் இடையே வீழ்ந்த இனம் மீண்டும் வாழ உறுதி கொண்டு விட்டது.

வந்த் கூட்டம் வாழும் நிலை மாறி வாழ்ந்த கூட்டம் வாழும் கூட்டமாகச் சிறப்படையும் நிலை யேற்படுவது உறுதி, என்று எண்ணி மகிழ்ந்தேன். எண்ணத்தைச் செயலாக்கவும் துணிந்தேன்.

—நாகன்.

வணங்காமுடி

(வாரப்பத்திரிகை)

தேவகோட்டையில் இருந்து விரைவில் வெளிவருகிறது.

விவரங்களுக்கு :

நிர்வாகி : வணங்காமுடி

S. M. L. தெரு, தேவகோட்டை

பெரும் பயணம்

கண்ணதாசன்

ஈரோட்டில் தோன்றிய திராவிட சமுதாயத்தின் விடிவெள்ளி வளர்ந்த கதை பெரும்பயணம். அதில் செந்தமிழ் நாட்டின் அந்த நாள் வாழ்வையும், திராவிட மக்களின் செழு வரலாற்றையும், மன்னர்களின் மாட்சியையும், ஆடுமாடுகள் முன் நடந்திட, ஆரணங்குகள் பின் தொடர்ந்திட, கன்னித்தாயாக எல்லையைத் தொட்டு, சூதுமதியும், சூழ்ச்சி மனமும் கொண்டு, தூய்மை துளியும் இன்றி, திராவிட சமுதாயத்தை அடுத்துக் கெடுத்த ஆரியர்களின் செய்கையும்-ஆரியப்பெண்களின் விழிக்குள்ளே சாய்ந்த மன்னர்கள், அதன் பின் நாட்டின் நிலை, ஈரோட்டில் தோன்றிய ஒளி தென் இந்திய நல உரிமைச் சங்கமாக உருவெடுத்தது. அதன்பின் அண்ணாவின் தலையீடு, தீவிரப் போக்கு, திராவிடக் கழகம் கண்டது. அதைக்கண்டு பார்ப்பனர்கள் அலறியது. திராவிடரிலேயே சிலர் எதிர்த்தது. 1925-ல் காஞ்சியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் எஸ். இராமனுதன் போன்றோர் விலகியது. அழகிரி, எஸ். வி. லிங்கம், சௌந்தர பாண்டியனார், சிங்காரவேலர் இடம் கொள்ளுதல். குருசாமி, ஜீவானந்தம் போன்றோர் பெரியாரின் தொண்டராதல். 1927-ல் முத்தையா அமைச்சராகி 'வகுப்புரிமை' வழங்கல். அதை எதிர்த்த ஆரியத்தின் காட்டுக்கூச்சல். 1937-ல் கொலைகார ஆச்சாரியார் கட்டாய இந்தியைக் கொண்டு வருதல். சதிகாரப் பார்ப்பனரின் கொண்டாட்டம். திரண்டெழுந்த திராவிடப் பெரும்படை, களங்காண எழுந்த காஞ்சிச் செம்மலின் உரை. பன்னீர்செல்வத்தின் சட்டசபை முழக்கம். மறைமலை, கி.ஆ.பெ. பாரதி, போன்றோரின் இனமுழக்கம், பெரியார் சிறையிலடைக்கப் படுதல். தமிழகத்தின் கொந்தளிப்பு. 1938 விடுதலை. கட்டாய இந்தி தளர்தல் 1939. காஞ்சியில் பன்னீர்செல்வத்தின் தலைமையில் மாநாடு. இத்தனையும் நம் பெரும்பயணத்தில் ஓடிய சம்பவங்கள், இனி........

செந்தில் குமாரர் சேலம் சித்தையன்
நாயகம், ரோசு, குகைசெகதீசன்
நன்மலர் முகத்தார் ஒற்றியூர் சண்முகம்
சௌந்தரபாண்டியன், சாமியப்பர், (எம்)
தாமோதரர் உடன் சாமி சண்முகம்
ஆய இவரும் அன்னையர் பலரும்
காளையர் கூட்டமும் காஞ்சி மாநாட்டில்
எட்கிடமின்றி இருந்தது ! ஆங்கே

செயப்படு முடிவுகள் ஐந்தையும் ஏற்றுச்
சிந்தை களிப்புறச் சென்றது கூட்டம் !
முடிவுகள் ஐந்தும் முறையே கூறுவன் :
" இந்திப்போர் புகு இளங்காளைகளின்
தொண்டிற்கெம் முளம் நன்றி கூறுதும் !"
ஒன்று !

" அன்னவர் பலரும், மறுபோர் காணில்
அழைத்திடக் கூறிய அருஞ்சொல் கேட்டு
மகிழ்கிறோம் ; தமிழர் நலம்பெற வாழத்
தனையே ஈயத் தயங்கா வீரரைக்
கண்டனம் மகிழ்வைக் கழறுகின்றோமே !"

இரண்டு !

" தலைவர் கட்டளை தலைமேற்றாங்கி
கட்டுப்பாட்டுணர்வில் களப்போர் நிறுத்திப்
படைமுறை கூறிய தமிழரைக்காண
அடங்கா மகிழ்ச்சி அடைகிறோம் ! வாழ்க !"

மூன்று !

"புதுப் பள்ளிகளில் புகுத்திடவில்லை
எனினும் இந்தி எடுபடவில்லை !
தாளா மனத்துடன் புகல்கிறோம்' ஈது
சரியல என்று அறைகுதும் அவைக்கு !"
நான்கு !

அடுத்தொரு போர்வரில் ஆவன செய்ய
அடியிற்கண்டோர் அடங்கிய குழுவை
அமைக்குதும் ; திட்டம் அஃதுவகுக்கும் !

[1. தலைவர் பெரியார் 2, சர். பன்னீர்ச்செல்வம்
3, குமார ராசா முத்தையா 4. ஊ. பு. அ. சௌந்தர பான்டியன் 5. பேராசிரியர் பாரதியார்
6, நெடும்பலம் சாமியப்பா 7. செ. தெ. நாயகம்
8. திருவொற்றியூர் சண்முகம் 9. எம். தாமோதரம்
11. சி. பாசுதேவ் 11. டி. ஏ. வி. நாதன்
12. சாமி சண்முகானந்தம் 13. சாமி அருணகிரிநாதர்
14. வி. பி. எஸ். மணியர் 15. கந்தம் ரோசம்மாள்
16. தளபதி அண்ணா (செயலாளர்)
ஐந்து !

[தொடரும்]

இலக்கியத்தில் காதல்

—: காரை முத்துப்புலவர் :—

காமத்துப்பாலில் கண்ணோட்டம் செலுத்திக்கொண்டிருந்தேன். வள்ளுவன் எழுவார்த்தைகளில் எவ்வளவு கருத்துக்களை அடக்கிவிடுகிறான் என்று எண்ணிஎண்ணி அதிசயித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு 'பெரிய எழுத்துப்' புத்தகம் என் 'தலை'யில் விழுந்தது ! அதிசயிப்பீர்கள் ; தலையில் எப்படி விழுந்ததுஎன்று ! பல ஆண்டுகளுக்கு முன்னால் பரணில் போடப்பட்டுக்கிடந்த அந்தப் புத்தகத்தை ஒருபூனை தள்ளிவிட்டது. தலையில் விழுந்த அதை எடுத்துப் பார்த்தேன். அதன் தலைப்பு புலந்திரன் களவு மாலை'' என்றிருந்தது.

புரட்டிப்பார்த்தேன் '' புகழேந்திப் புலவர் இயற்றியது '' என்றிருந்தது. ! எந்தப் புகழேந்தியோ, தெரியவில்லை ! பழைய புகழேந்திதான் என்று கதை சொல்லக் கேட்டிருக்கிறேன். அதாவது: புகழேந்தியை ஒட்டக்கூத்தன் சிறையில் போட்டு சோறுகூடக் கொடுக்காமல் விட்டுவிட்டானும். அந்தச் சிறைக்கு மறு பக்கத்தில் ஒரு தெரு இருந்ததாம். அந்தத் தெருவைப்பார்த்து சிறையில் ஒரு சன்னல் இருந்ததாம். தினமும் புகழேந்தி அந்தச் சன்னலில் நின்று கத்துவானும். அந்தத் தெருவில் போகின்ற தாய்மார்கள் அவன்மேல் பரிதாபப்பட்டு 'சோறு' கொண்டுவந்து போடுவார்களாம் ! புகழேந்தியும், அவர்களிடமே கேட்டு ஏடும் எழுத்தாணியும் வாங்கி, இதுமாதிரி பெரிய எழுத்து நூல்கள் எழுதி அவர்களுக்குத்தருவானும் ! அவைதான் இப்போது விற்பனையாகிக்கொண்டிருப்பவை என்று அழகான கதை சொல்லக் கேட்டிருக்கிறேன் ! புகழேந்தியின் காலத்தை 12-ம் நூற்றாண்டு என்று சிலர் சொல்கிறார்கள். இந்த வேடிக்கையில் பதினாறும் நூற்றாண்டிற்குப் பின் நடந்த தேசிங்குராசன் கதையும் புகழேந்தியின் பெயரால் விற்பனையாகிறது ! இந்த 'எழவெ'ல்லாம் எப்படியாவது தொலையட்டும்.

அந்த 'புலந்திரன் களவு மாலை' யைப்புரட்டியதில் எனக்கு அற்புதமான ஒருகட்டம் கிடைத்தது! ஆகா! சில்லறைப் புலமைகூட சிருங்கார ரசத்தில் நல்ல நகைச்சுவையைக் குழப்பித்தருகிறது !

கேளுங்கள். புலந்திரன், தன் காதலியை ஒரு இரவில் கள்ளத்தனமாகச் சந்திக்கிறான். காதல் கனிகிறது. இருவரும் உறவு கொண்டுவிடுகிறார்கள். (இதில், புலந்திரன், பஞ்சபாண்டவர்களைச் சேர்ந்தவன் என்று கூறப்பட்டுள்ளதும் நினைவிலிருக்கவேண்டும்) உறவுகொண்டு உற்சாகமாக இரவு முழுவதும் விழித்திருக்கிறார்கள். அதிகாலையில், யாருக்கும் தெரியாமல் புலந்திரன் புறப்படப்போகிறான். அப்போது அவன் காதலி அவனைப் பார்த்து, 'என் பிரபுவே' இன்ப உலகத்தையே எனக்குக் காட்டினீர்கள் ! 'நன்றி'! ஆனால் ஒன்று ; இப்போது கலந்து மகிழ்ந்து விட்டோமே, இதில் கர்ப்பம் உண்டாகுமா ?'' என்று கேட்கிறாள்.

நியாயமான சந்தேகந்தான்! என்றாலும், புலந்திரனுக்கு மகா கோபம் வருகிறது.

'' அதென்ன அப்படிக் கேட்டுவிட்டாய்! பேதைப் பெண்ணே ! உங்கள் பரம்பரைபோல் நினைத்துக் கொண்டாயா உங்கள் பரம்பரைதான் ஆண் மலடு, பெண் மலடு அத்தனையும் தான் மலடு! எங்கள் குலம் உனக்குத் தெரியாதுஎங்கள்அர்ச்சுனமகராசா,தெருவில் ஊர்வலம் போவார் ! அப்போது பல பெண்கள் அவருடைய முன்னழகைப் பார்த்துச் சோர்ந்து விழுவர் ; உடனே படாரென்று கர்ப்பம் உண்டாகிவிடும் !'' என்று போடுகிறான் ஒருபோடு !

அவனுக்கு அவ்வளவு உறுதி ! தாங்கள் 'கர்ப்ப'வீரர்கள் என்பதை அடித்துச் சொல்கிறான். '' இன்றையிலிருந்து எண்ணிக்கொள் பத்தாவது மாதம் '' என்கிறான். வெற்றிப் புன்னகையோடு வீராப்பாகப் பார்க்கிறான். தாங்கள் பார்த்தாலே பற்றிக்கொள்ளும் என்கிறான். எங்கள் கண்களே, '' கர்ப்ப உற்பத்தி நிலையங்கள் '' என்கிறான்.

'' உங்கள் குலம் போல வல்ல
ஓடை மலர்க் கண்ணளே !
உங்கள் குலம்,

[8-ம் பக்கம் பார்க்க]



அவள் முகம் வாடி, சோபை இழந்து கிடந்தது. இடைதுறையானின் பட்டத்தரசியா இவள் ?'' என்ற சந்தேகத்தோடு அவளை கவனித்தான், தளநாயகன். அவளும் அதைப்புரிந்து கொண்டவள் போல், தலை குனிந்தபடி, கண்ணீர் சொரிந்து நின்ருள். சிறிது நேரம் தான் தளநாயகன் சிந்தனையில் இருந்தது ; மறு கணம் கடமை உணர்வு கொண்டான் ; சூழ் நிலைப் பரபரப்பை மீட்டும் நினைவு கொண்டான். சந்தேகப்பார்வைபோயிற்று ; அதிகாரக் குரல் முன் வந்து நின்றது.

"எங்கே இடைதுறையான் ?'' இடிக் குரலில் அவன் கேட்டான்.

'' யாருக்குத் தெரியும்? '' என்பது போல் அமைதியாக இருந்தது அந்தப்புரம்.

கேள்வி பதில் பற்றி, தளநாயகனின் வீரர்கள் கவலைப் படவில்லை. அவர்கள், அந்தப் புரத்தின் சகல கட்டுக்களிலும் புகுந்து தேடினர் ; சுவற்றைக் கூடத் தட்டிப் பார்த்தனர் ! எங்கும் இடைதுறையானைக் காணவில்லை. தளநாயகன், நிலைமையைப் புரிந்து கொண்டான். சூழ்நிலை அறிந்து இடைதுறையான் தப்பி ஓடியிருக்க வேண்டும் என்கிற முடிவு அவன் மனதில் உறுதியாக அமர்ந்து கொண்டது. இடுப்பிலே கை வைத்தபடி தலையை மேலும் கீழும் ஆட்டி, உதட்டைக் கடித்தான், தளநாயகன். கண்களால், அந்தப் பெண்ணைத் தேடினுன், அவளையும் காணவில்லை.

'' நன்றி செலுத்தவேண்டும் '' என்றுதான் தளநாயகன் கமலினியைத் தேடினுன். அவளையும் காணுதது, அவனுக்குப்புதிராகவே இருந்தது. ஆயினும் அதைப் பற்றி அவன் சிறிதும் கவலைப்பட வில்லை,

"சரி ! இந்தப் பெண்கள் அனைவரையும் கைது செய்யுங்கள் !'' என்று வீரர்களுக்கு உத்தரவிட்டு விட்டு திரும்பி நடந்தான் தளநாயகன். இராசேந்திரன் தங்கியிருந்த இடத்துக்கு வந்தான்.

அங்கே . . .

இராசேந்திரன், சிந்தனையோடு முன்னும் பின்னும் உலவிக் கொண்டிருந்தான். உள்ளே வந்த தளநாயகன், உற்சாகக் குரலில், '' மன்ன ! '' என்ருன்.

பதிலின்றித் திரும்பினுன் இராசேந்திரன்.

தளநாயகன் தோற்றம் இப்போது மிகவும் கம்பீரமாக இருந்தது. '' நான் சொன்னது தான் சரி ! '' என்கிற மாதிரி அவன் கண்கள் இராசேந்திரனைப் பார்த்தன. வெற்றிப் போதையோடு, தளநாயகன் பேசினுன்.

'' எடுத்துச் சொன்னபோது, எற்க மறுத்தீரே, மன்ன ! என்ன நடந்தது இப்போது ! சதி உருவாகும் இடத்திலே நம் தயாள குணத்தைக் காட்டிக் கொள்ள முயன்ருேமே, அது எவ்வளவு தவறு தெரியுமா? மன்ன ! சரியான நேரத்தில் சூழ்ச்சியை முறியடித்து விட்டோம். இடைதுறையான், பேடி போலத் தப்பி ஓடி விட்டான். இப்போது நாம் செய்ய வேண்டியது ஒன்றுண்டு. இடைதுறை நாட்டின் ஆட்சிப் பொறுப்பு, சேனைகள் முதலிய யாவற்றையும் சோழ மயம் ஆக்க வேண்டும். அணுவளவு சூழ்ச்சி யென்ருலும், சோழ மண்டலத்திற்கு எதிராகத் துளி திட்டம் உருவாகிறது என்ருலும், அதில் சம்பந்தப்பட்டவர்களைத் துண்டம் துண்டமாக வெட்டிஎறியவேண்டும்! மன்ன ! இங்கு மட்டும் அல்லவாம் நமது நாட்டிலும் அப்படி ஒரு கூட்டம் இருக்கிறதாம் ! எள்ளிச் சிரிக்காதீர்! ஏதென்று கேட்காதீர் ! இப்போது எப்படி, என் வார்த்தைகள் உண்மையாயினவோ, அதே போல இப்போது நான் சொல்வதும் உண்மையாவதைக் காண்பீர். எனக்கு நீர் ஒரே ஒரு அனுமதி மட்டும் தரவேண்டும். எந்த நேரத்திலும் உள் நாட்டு விவகாரத்தில் தலையிட்டு அவசியமானுல் நடவடிக்கை எடுக்க அனுமதி தரவேண்டும் ! '' என்று மடமட வென்று பேசி முடித்தான், தளநாயகன்.

இவ்வளவு நேரமும் வேறுபக்கம் பார்த்தபடி, தளநாயகன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இராசேந்திரன், ''சரி'' என்பது போலத் தலையை ஆட்டினுன். தளநாயகனின் அருகில் வந்து, அவன் தோளில் கையை வைத்தபடி பேசினுன்.

'' நல்லது தளநாயகா ! நல்லது! அந்த அதிகாரம் உனக்கு வழங்கப் படும். இப்போது அடுத்து நடக்க வேண்டியதைக் கவனி. நாம் சோழ நாட்டிற்குப் புறப்பட்டாக வேண்டும். வேண்டியவற்றை செய்து வைத்து விட்டு புறப்படத் தயாராக வேண்டும், உம். கவனி ! ''

விடை பெற்றுச் சென்ருன், தளநாயகன். அவன் உள்ளத்தில் விறுவிறுப்புத் தட்டியது. சோழன் படையின் அத்தனை அணித் தலைவர்களையும் கூட்டினுன். யாரை, இடைதுறை நாட்டுக்கு நியமிப்பது என்று ஆலோசித்தான். கடைசியில், 'உறந்தையடி' அணித்தலைவனை பெருநள்ளியை நியமிப்பதென்று முடிவு கட்டினுன். தனது அணிக்காளைகளையும் அவனுக்குத் துணை நிறுத்தினுன். இந்த முடிவை இராசேந்திரனுக்குக்கூறிஅனுமதிபெற்ருன். இடைதுறை நாட்டை, தனது இரும்புப் பிடிக்குள் நிறுத்தி வைத்து விட்டு, புறப்படத் தயாராயினர் இராசேந்திரனும் தளநாயகனும்.

இடைதுறை அரண்மனை ஆர்ப்பாட்டமாகக் காணப் பட்டது. இது சோழ நாடுதானே ? என்கிற ஐயத்தை எழுப்பியது, அங்கு காணப்பட்ட தோற்றம். நடனம் வல்ல நகைமுக மாதரும் புறப்பட ஆயத்தம் செய்தனர். மறு நாள் அதிகாலையில் சோழன் படையில் ஒரு பகுதியும், இராசேந்திரன், தளநாயகன்ஆகியோரும் பயணம் துவங்கினர்.

10

பிரிந்தவர் கூடிடில் பேசவும் வேண்டுமோ !

கருப்பையூர் தேக்கிக்
கண்விழித்துக் காத்திருந்து
விருப்போடு பெற்று
மெய்சேர்த்துப் பாப்பாடி
பொறுப்போடு காத்துப்
பொன்பூட்டி மகிழ்ந்தாள் தன்
திருப்பாதம் கண்டேன்.

"அரிசங்கமனின் ஆட்கள் தேடி வருகிருர்கள் ! '' என்ற சொற்கள் கருநாக மங்கையைக் கனல் பிழம்பாக்கின! "சதிகாரரன் ! வெறிபிடித்த வீணன் ! . . . . '' என்று பற்களைக் கடித்தாள்.

'' வரட்டும் ! ஒவ்வொருவரையும் மூன்று துண்டுகளாக எண்ணி வீழ்த்துகிறேன் ! '' என்ற வீரக்குரல் கேட்டது ! எல்லோரும் திரும்பினர்! மங்கையின் காதலன், வாளுக்கு முத்த மிட்டவாறு பேசிக் கொண்டிருந்தான். நந்தினி அவனைப் பார்த்தாள் - இரவில் கண்டகாட்சி மின்னி மறைந்தது. மங்கையின் உள்ளத்தில் ஆச்சரியம் பெருக்கெடுத்தது. தன் லட்சியமே நிறை வேருது என்ற காதலன், அந்த லட்சியத்திற்குத் துணை தேடுகிருனே என்று அதிசயித்தாள். மனதில் மகிழ்வு பொங்கிற்று. 'போர்'என்று கேட்டால், பூரித்துக் கிளம்பும் பரம்பரை; அதுவும் காதலியை எதிர்த்துக் கயவர்கள் வந்தால் கனல் கக்காமலா இருக்கும் ! அந்த நேரத்தில் அவனுக்கு எற்பட்ட ஆத்திரத்திற்கு அது தான் காரணம்.

ஆனுல் மங்கை அதற்குத் தயாராக இல்லை. கூலிகளோடு பொருத அவள் விரும்பவில்லை. தவறி, தங்களில் ஒருவர் அவர்களிடம் சிக்கிக் கொண்டாலும் விளைவு பயங்கரமாக

இருக்கு மென்பதை அவள் அறி வாள்! அதனால், அவள் வேறு முடிவுக்கு வந்தாள். கம்பீரமாகத் திரும்பினாள்.

"நாம் இப்பொழுதே சாந்திமத் தீவிற்கு புறப்படுகிறோம்!" என்றாள்.

காதலனான வீரன் அதை விரும்ப வில்லை.

"இல்லை! வீணர்களைக் கொன்று போட்டு விட்டுத் தான் போக வேண் டும்!" என்றான்!

எல்லோரும் அந்தப் புதிய வீரனை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். மங்கையோ அவனை, தங்களுக் குள்ள உறவு முறையோடு பேச வில்லை. ஒரு வீரனும் தலைவியும் பேசுவது போலவே பேசினார்கள்!

"இல்லை! உனக்குத் தெரியாது! நாம் இப்பொழுதே புறப்படுகிறோம். ஆயத்தம் செய்யுங்கள்; என்றாள் மங்கை. வீரர்களும் மங்கையரும் வேக வேகமாகத் தங்கள் இருப்பி டம் ஏகினர். துணிமணிகளை மூட்டை கட்டினர். உணவுப் பொருள்கள், அனைத்தும் குதிரைகளின் மீது ஏற் றப் பட்டன, கீழ் மாளிகையி லிருந்து சில முக்கியப் பொருள்கள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டன. மற்றவை, எதிரிகளுக்குப் பயன் படாதவாறு உடைக்கப் பட்டன.

இவ்வளவும் நந்தினிக்கு ஆச்சரிய மாக இருந்தது. "அரிசங்கமனின் ஆட்களுக்கு இவர்கள் ஏன் பயப்பட வேண்டும்?" என்று அதிசயித் தாள். கருநாகமங்கை அவளிடம் வரலாறு கூறும்போது அன்னையின் பகைக் கூட்டம் எது என்பதைக் கூறவில்லை, ஆகவே அரிசங்கமனைப் பற்றிய கணக்கு எதுவும் அவளுக்குப் புரியவில்லை, எல்லாரோடும் அவ ளும் புறப்படத் தயாரானாள். கணைக் காயனின் பிணம் பத்திரமாக மூலி கைகளில் சுற்றப்பட்டு, எடுத்துக் கொள்ளப்பட்டது. நந்தினியை ஒரு ரதத்தில் ஏற்றி, பக்கத்தில் இரண்டு பெண்களை உட்கார வைத்து படைகளின் நடுப்பகுதியில் அந்த ரதம் போகும்மாறு உத்திர விட் டாள் மங்கை. பிறகு, தானும் ஒரு ரதத்தில் உட்கார்ந்து கொண் டாள். காதலனான வீரனே அந்த ரதத்தை ஓட்ட ஆரம்பித்தான். எப் போதும் மங்கையின் ரதத்தை ஓட்டுகிற வீரன், இதைக் கண்டு அதி சயித்ததை யாரும் கவனிக்கவில்லை. படைகள் புறப்பட்டன. புழுதிப் படலம் எழுந்தது. மங்கை, அது வரை தங்களுக்கு இடம் கொடுத்த ஆலங்காட்டைத் திரும்பிப் பார்த் தாள். தாயைப் பிரிந்து செல்லும் சேய்போல அவள் காணப்பட்டாள்.

பண்டங்களும் பாண்டங்களும் மட்டுமே சிதறிக்கிடக்க, காட்சி தந்த ஆலங்காடு "மனித நடமாட்டம் முடிந்து விட்டது" என்று அது சொல்வது போல் இருந்தது மங் கைக்கு.

படைகள் சென்று சிறிது நேரம் ஆகியிருக்கும். தனிமையில் உழலும் விதவை போலக் காட்சி தந்த ஆலங்காட்டில் ஒரு பரிதாப உருவத் தின் காலடி பட்டது. அந்த உருவம் ஆலங்காட்டைச் சுற்றிச் சுற்றிப்பார்த் தது. நாடிழந்து மக்களையும், நலத் தினையும் துறந்து, கேடடைந்து அங் குற்ற தனக்கும் ஆலங்காட்டுக்கும் நிலைமையில் ஒற்றுமை யிருப்பதாக

கண்ணதாசன்

அந்த உருவம் கருதியது. அந்த உருவம் தான் 'இடைதுறை மன் னன்!' இடைதுறையான் ஆலங் காட் டின் பகுதிகளுக்குள் நுழைந்து ஒவ்வொரு இடமாகப் பார்த்தான். அவனுக்கு அந்த இடம் எந்தக் கதையையும் கூறவில்லை. உடைந்து கிடக்கும் பொருள்கள் அவனுக்கு குழப்பத்தையே ஏற்படுத்தின.

திறந்துகிடந்த கீழ்மாளிகைக் குள் குனிந்து பார்த்தான். ஒரே கருக்கிருட்டு. இறங்கும் படிகளில் சில மட்டும் அவன் கண்களுக்குத் தெரிந்தன. துணிச்சலோடு மெது வாக இறங்கினான். தட்டுத்தடுமாறி, கைகளால் தடவிப்பார்த்தான். உருப்படியான எதுவும் அவன் கை களுக்குக் கிடைக்கவில்லை. 'வழ வழ' வென்று, கயிறு போல ஒரு பொருள் அவன் கைகளில் பட்டது. பட்டதுதான் தாமதம், திடுக்கிட்டுத் துள்ளிவிழுந்து அந்தப் பொருளை உதறிஎறிந்தான். அது மங்கையின் கழுத்தில் இருந்த - இறந்துவிட்ட நாகம்! இடைதுறை-யானை, பயம் கவ்வியது. வெளியே போய்விடுவது தான் சரி என்று தீர்மானித்தான். கால்தடவித் தரை கண்டு மெதுவாக நடந்தான். படிகட்டுகளுக்கு மேலே தெரிந்த வெளிச்சம் ஓரளவுக்கு அவனுக்கு உதவியது. படிக்கட்டுகளை நெருங்கினான். படாரென்றொரு சப் தம் கீழ்மாளிகைக்கதவு மூடிக் கொண்டது! அதன்மீது குதிரைக ளின் காலடிச் சப்தம் கேட்டது! இடை துறையான் கூவினான்; கேட்பா ரில்லை. கதவின்மீது ஆட்களும் குதிரைகளும் நடமாடும் சப்தம் மட் டும் அவனுக்குக் கேட்டுக்கொண் டிருந்தது.

மங்கையும் குழுவினரும் மாலை யில் வெகுதூரம் சென்றுவிட்டார் கள். "இனி ஆபத்தில்லை!" என் கிற நிலைமைக்கு வந்துவிட்டார்கள்! ஆட்டமும் பாட்டும் கிளம்பின! வட பெண்ணையாற்றின் மூலை இடமான மலாட்டுப் பகுதியில் எல்லோரும் ஓய்வு கொண்டனர். குதிரைகளை யும் ரதங்களையும் விட்டு இறங் கியதுமே, எல்லோரும் புல்வெளி யில் போய் விழுந்து கால் கைகளை நீட்டி, களைப்புத் தீர்த்துக்கொண்ட னர். மங்கை, களைப்பின்றி இருந் தாள். நந்தினிக்கு மனக்களைப்பு அதிகமாய் இருந்தது. கூடாரங்கள் அடிக்கப்பட்டன. நந்தினி ஒரு கூடா ரத்தில் தனியே தங்கினாள். மங்கை, சிறிது தூரத்தில் தன் கூடாரத்தை ஏற்படுத்திக்கொண்டாள்.

இரவு வந்தது; மங்கை நந்தினி யிடம் வந்து, "வசதியாக இருக் கிறதா!" என்று கேட்டாள்.

நந்தினி சாமின்றித் தலையை ஆட்டினாள். "அவசரமானால் கூப் பிடு வருகிறேன்." என்று கூறி விட்டு மங்கை வெளியேறினாள்.

தனிமைத்தணலில் வெந்தாலும் தாயின் நினைவில் ஆறுதல் கொண்டநந்தினிகண்ணயர்ந்தாள்.

மங்கையும் தனித்துத்தான் கண் ணயர்ந்தாள், அவளது காதலன் தூரத்தில் புல் வெளியில் பள்ளி கொண்டான்.

உள்ளே கிடந்த இடைதுறையான் பேச்சுமூச்சின்றிப் படிக்கட்டிலேயே உட்கார்ந்துவிட்டான். பசி அவனைப் படாதபாடு படுத்தியது. வெகுநேரம் கழித்து, இரவின் அமைதியிலே, இடைதுறையான் மெதுவாகத் தலையைத்தூக்கி, கீழ்மாளிகைக் கதவை மேலே தூக்கினான். அவன் நினைத்ததுபோல், அங்கே அமைதி இல்லை. வீரர்கள் பலர் தீப்பந்தங் களை எரியவைத்தவாறு உட்கார்ந்து கொண்டிருந்தனர். பயத்தால், இடைதுறையான் மேனி சிலிர்த்தது; முகம் வியர்த்தது. பழையபடியும் கதவைச் சாத்திக்கொண்டான். கதவைச் சாத்திய சப்தம் ஒருவீர னுக்குக் கேட்டுவிட்டது!

"அண்ணே! சத்தம் கேக்குது!" என்று மற்றவர்களிடம் கூறினான். சில வீரர்கள் எழுந்து, சத்தம் வந்த திசையை நோக்கி நடந்தனர்.

(தொடரும்)

செந்நிறங் கனிந்த வாயும்
சேல் தவழ் விழியும், வண்ணப்
பொன் நிறங் காட்டும் மேனிப்
புதுமையும் சிரிக்கும் பாவை!

காதலன் மார்பில் இன்பக்
கனியெனத் தவழ்ந்து அந்திப்
போதினிற் போதை யூட்டும்
புதுவகைக் கள்ளோ? பெண்ணே?

பம்பாய் தி. மு. க.

13-1-55 வியாழன்
இரவு 8 மணிக்கு
பீரேஸ் தாமோதர் திடலில்

பாண்டுப் திராவிட முன்னேற்றக் கழகப் படிப் பக வளர்ச்சி நிதிக்காக

பம்பாய் தி.மு.க. நடிகர் குழுவினர் தரும்

"ஒரே ஆசை"

கதை, வசனம்:
கடலூர் புரட்சிதாசன்

பாடல்கள்:
புத்தரசு

சென்னை நண்பர் களுக்கு

பல,கட்சித் தலைவர்கள், இயற் கைக் காட்சிகள் விதவிதமான வண்ணமுகப்புடன் நூற்றுக்கு மேற்பட்ட ரகங்களில் மொத்த மாகவும் — சில்லறையாகவும் மலிவான விலையில் கிடைக்கும்.

—: கிடைக்குமிடம் :—
சாமி & கம்பெனி
183, மவுண்ட் ரோட்,
சென்னை-2.

தென்றல் தரும் இலக்கியப் பரிசுகள்!

பெருங்கதை-நாடகம்-காவியம்-இலக்கியச்சுவை

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு, நாங்களும் சில நல்ல இலக்கியங்களைத் தேடித் தர விரும்புகிறோம். அதற்கென, ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, ரூபாய் இரண்டாயிரம் வழங்குவதென முடிவு கட்டியுள்ளோம். அதன்படி,

1. பெருங்கதை(நாவல்)ப்பரிசு	ரூ. 500
2. நாடகப்பரிசு	ரூ. 500
3. காவியப்பரிசு	ரூ. 500
4. இலக்கியச் சுவைப்பரிசு	ரூ. 500

என இது வழங்கப்படும். இதில் எந்தக்கட்சி-மதச்சார்புடையவர்களும் கலந்துக்கொள்ளத் தடை இல்லை. **இதற்கென கட்டணம் ஏதும் இல்லை.** இதில் கலந்து கொள்ளும் எழுத்தாள நண்பர்கள், கீழ்க்காணும் விதிகளைக் கடைப் பிடிக்க வேண்டும்.

(அ) தாங்கள் அனுப்பும் 'விஷயம்' தங்கள் சொந்தக் கற்பனையிலேயே உருவானதென்றும், தழுவலோ, மொழிபெயர்ப்போ. அல்ல என்றும் உறுதியளிக்கவேண்டும். இதற்குமுன் பிரசுரமானது அல்ல என்றும் உறுதி கூற வேண்டும். இந்த உறுதியை. தாங்கள் அனுப்பும் 'விஷய'த்தின் முதற்பக்கத்தில் எழுதிக் கையொப்பம் இட்டுவிடவேண்டும்.

(ஆ) எழுதுவதைக் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், அடித்தல் திருத்தல் அதிகமின்றி எழுத வேண்டும்.

(இ) 'விஷய'த்தின் கூட சிபாரிசுக் கடிதங்கள் எதுவும் அனுப்பக்கூடாது. அப்படி வருவது கவனிக்கப்படமாட்டாது. 'விஷயத்தின் தலைப்பையும், தங்கள் பெயர் முகவரி முதலியவற்றையும் தனிக்காகிதத்தில் எழுதி அதிலேயே வைத்து அனுப்பவேண்டும்.

(ஈ) தபாலில் சிதைவுறுதவாறு நல்ல முறையில் கட்டி அனுப்பவேண்டும். மேலே, "பெருங்கதைப்போட்டிக்கு" அல்லது "நாடகப்போட்டிக்கு" அல்லது, மற்ற இரண்டு போட்டிகளில் எதற்கு என்பதைக் குறிப்பிட்டு, அதன் கீழே **ஆசிரியர், தென்றல், சென்னை-14.** என்று முகவரி எழுத வேண்டும். இவற்றை ரிஜிஸ்தர் தபாலிலேயே அனுப்பவேண்டும். நேரில் கொண்டுவந்து தரக்கூடாது; தந்தால், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(உ) தேர்ந்தெடுக்கப்படாததைத் திரும்பப் பெறவேண்டுமானால், தேவையான அளவு 'ஸ்டாம்பு' அனுப்பவேண்டும்.

(ஊ) எந்த 'விஷய'மும் முழு நீள வெள்ளைத்தாளில், 200 பக்கத்திற்குக் குறையாமலும் 250 பக்கத்திற்கு மேற்போகாமலும் இருக்கவேண்டும்.

(எ) **பெருங்கதை** (நாவல்) எழுதும் அன்பர்கள், இயற்கைக்கு மாறான 'அதீத' சம்பவங்களை கதைக்குக் கருவாகக் கொள்ளக் கூடாது. அதைத்தவிர, இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதற்கு வேலி இல்லை. சமுதாய சீர்திருத்தத்தை அடிப்படையாகக்கொண்டு சுவையோடு செல்லும் பெருங்கதைகள், காலத்திற்கு ஏற்றவே என்பதை மட்டும் நினைவில் கொண்டால்போதும் (சமூகம் அல்லது சரித்திரம்)

(ஏ) **நாடகம்** எழுதுவோருக்கும் மேற்கண்ட யோசனைகளே! மற்றும், நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்றதாயிருத்தல் நல்லது எனவும் கூற விழைகிறோம்.

(ஐ) **காவியம்** எழுதுவோருக்கு (எ)யில் வந்துள்ள யோசனைகள் பொருந்தும். 'வசன காவியம்' அரங்கேறாது; இலக்கணம் தப்பாதிருக்கவேண்டும்; நடையும் முறையும் புதுமையாய் அமைதல் நலம். எளிய தமிழில் இயங்கவேண்டும். (உதாரணம் **எதிர்பாராத முத்தம்.**)

(ஒ) **இலக்கியச்சுவை** எழுதுவோர்க்கு ஒரு வார்த்தை. திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி. சீவக சிந்தாமணி, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலிங்கத்துப் பரணி, அம்பிகாபதி க்கோவை, தஞ்சைவாணன் கோவை, புறநானூறு, அகநானூறு, நைடதம், தனிப்பாடல் திரட்டு, மூவருலா, முத்தொள்ளாயிரம், நற்றிணை, கலித்தொகை முதலிய இலக்கியங்களில் உள்ள காவியச்சுவைகளில் சிலவற்றை எடுத்துக் கொண்டு (அல்லது, முடியுமானால் முழுவதையும் வைத்துக் கொண்டு) ரசனை தரும் வகையில்-பாமரர்க்கும் புரியும் வகையில் எழுதக்கோருகிறோம். ஏதாவது ஒரே இலக்கியத்தின் முழுச் சுவையையும் எழுதலாம். இதில்மேற்கண்ட இலக்கியங்களின் சுவையோடு, கம்ப ராமாயண வரிகளை எடுத்துக்காட்டி, கம்பனிலும் உயர்ந்தவை மேற்கண்ட இலக்கியங்கள் என்று ஆதாரத்தோடு ஒப்புநோக்கி முடிவுகட்டும் 'விஷயம்' நல்ல மதிப்பைப்பெறும்.

[மற்றும் ஏற்படும் சந்தேகங்களுக்கு, நமது அலுவலகத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.]

முடிவு தேதி 31—5—55.

1. முதற்பரிசு 300; இரண்டாவது பரிசு 200 என பரிசுகள் வழங்கப்பெறும்.
2. பரிசுபெற்ற இலக்கியங்களின் முழு உரிமையும்-ஐந்து ஆண்டுகளுக்கு-'தென்றல்' பதிப்பகத்தைச் சேரும்; பிறகு ஆசிரியர்களின் உரிமையாகிவிடும்.
3. பரிசுபெற்ற இலக்கியங்களை தெலுங்கில் மொழி பெயர்த்து 'தென்றல்' வெளியிடும். அதற்கென, ஆசிரியர்களுக்கு 10 பெர்சன்ட் 'ராயல்டி' தரப்படும்.
4. கேரளமொழியில் வெளியிட்டாலும் அவ்வாறே!
5. ஒவ்வொரு இலக்கியத்தையும் தேர்ந்தெடுப்பதற்கு ஐந்து நீதிபதிகள் வீதம் நியமிக்கப்படுவர்.
6. அனைத்திலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.
7. பரிசு பெறத்தகுதிஇன்றி,பிரசுரத்தகுதிஉடையவற்றை 'தென்றல்' வெளியிட்டு, ஆசிரியர்களுக்கு 'ராயல்டி' வழங்கும்.
8. பரிசளிப்பு விழா சென்னையில் நடைபெறும். பரிசு பெற்றோர் வந்துசெல்லும் செலவை 'தென்றல்' ஏற்றுக்கொள்ளும்.
9. ஏதாவது இரண்டு இலக்கியங்களில் ஒருவரே முதற்பரிசு பெற்றால், அவருக்கு, 'தென்றல்' மற்றும்ஒரு பெரும் பரிசு தரும்

[மற்றும் ஏற்படும் சந்தேகங்களுக்கு, நமது அலுவலகத்திற்கு எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.]

போட்டி நிர்வாகி:
'தென்றல்'
சென்னை-14.

வெண்பாப் போட்டி-1

கீழ்க்காணும் வரியைக் கடைசி வரி (ஈற்றடி)யாக வைத்து, வெண்பா எழுதுங்கள். தகுதியுள்ளவை அனைத்தும் பிரசுரிக்கப்படும். அதில் மிக உயர்ந்த வெண்பா ஒன்றுக்கு, பரிசாக 'தென்றல்' ஒரு ஆண்டுக்கு அனுப்பப்படும்.

"பூக்காமற் போகுமோ பூ"

(இலக்கணம் தப்பாது எழுதவேண்டும்.)

அனுப்பவேண்டிய முகவரி:

நீதிபதி 'சகி'
தென்றல்
சென்னை-14.

முடிவு தேதி
22-1-55

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆண்மலடு பெண்மலடு
அத்தனையும் தான் மலடு!
எங்கள் குலம் கேளாய்
இளங்கொடியே கூறுகிறேன்!
தேர்விசயன் அர்ச்சுனனுர்
தெருவழியே போம்போது
முன்னழகைக் கண்டு
மொய்குழல்மார் சோர்ந்திடுவார்!
அப்போதே கர்ப்பம்
அடையுங்காண் ஆரணங்கே!"

எப்படி! "அட்ருசக்கை" என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா! பின் - என்னையா! பஞ்சபாண்டவப் பரம்பரையை இந்தக் கேள்வி கேட்டால் கோபம் வருமா வராதா! நீங்களே சொல்லுங்கள்!

நமது மாவட்டச் செயலாளர்கள்

இந்தப்பகுதியில் முதல[illegible] தாக, தோழர் கே. எ[illegible] கண்ணபிரான் அவர்க[illegible] பற்றி 29-1-55 தென்ற[illegible] ஏ. கே. வில்வம் எழுதுவ[illegible] [தோழர் கண்ணபிரா[illegible] சென்னை மாவட்டச் செ[illegible] லாளர்.]

[ஆசிரி[illegible]

பிஞ்சுப் பகுதி

> "பிஞ்சுப் பகுதி பிறந்தது தென்றலில்;
> அஞ்சாக் கன்றுகள் ஆடும் அழகும்
> அறிவை உயர்த்த ஆக்கும் தொண்டும்
> நெறியிற் தவறாது நிறையும் ஆங்கே!
> தங்க மாதுளை செங்கனி பிளந்த,
> சிங்கக் குட்டிகள், சிரிப்பு வாழ்க!



முன்னுரை

அழகுத் தங்கைகளே!
அஞ்சாத் தம்பிகளே!

பிஞ்சுப் பகுதி ஒன்று தென்றலில் புதிதாகப் பிறந்திருக்கிறது. உங்களோடு ஆடிக் களிக்க நாங்கள் அமைத்துக் கொண்ட அழகுத் திடல் அது; கொஞ்சிக் குலாவக் கட்டிய தேன் கூரைவேய்ந்த தித்திப்புக் கூடம் அது!

வாழ்வில் உங்களது இன்பப் பருவத்தை - இளம்பருவத்தை நாங்கள் கடந்து விட்டோம். வருந்துகிறோம். உலகத்தையே கட்டி ஆளும் திறன்கூட ஒருவனுக்கு உண்டாகிவிடலாம். ஆனால் உங்கள் உள்ளத்தை அடையும் திறன் எளிதல்ல! அத்துணைச் சிறந்த, பெருமை நிறைந்த தூய பருவத்தையுடைய பிஞ்சுத் தமிழ்க் குன்றுகளே! உங்களை வாரமொருமுறை சந்திக்க, உங்களோடு உறவாட, அதனால் உவகை கொள்ள, இந்தப் பகுதியை எங்களது இன்பமாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இளமையை மறந்து, கடினமடைந்துள்ள எங்கள் மனமும் கரமும் உங்களது மென்மையைப் புரிந்துகொண்டு அதன் வழி போகாதிருந்தால், எங்களை இடைமறித்து, உங்கள் இன்ப வழிக்கு நீங்களே எங்களுக்கு வழிகாட்டி, எங்களை உங்களோடு இழுத்துப் போக, உங்களுக்கு உரிமையுண்டு. உங்கள் பகுதியில் உங்கள் ஆதிக்கத்திற்குத்தான் இடம். அதற்கு நாங்கள் அடங்கி, நீங்கள் விரும்பிக் கூறும் வழிகளையும் வசதிகளையும் நீங்கன் மகிழ்வுறும் வகையில் செய்துகொடுக்கக் காத்திருக்கிறோம். ஆகையால், பேரெழில் பிஞ்சுகளே, அஞ்சாது ஆணையிடுங்கள்.

அத்துடன் எங்களது எண்ணத்தையும் முன்னதாகவே உங்களிடம் தெரிவித்து விட வேண்டும், அதாவது இப்பகுதியில் வெறும் பொழுது போக்கு மட்டுமில்லாமல் பல துறை நல்வளர்ச்சிகளும் ஏற்படவேண்டு மென்பதே எங்கள் கருத்து.

நம் தமிழின் இனிமை இணையில்லாதது. நமது ஆற்றல், அறிவு, பண்பு மற்ற இனத்தவரிலும் உயர்ந்தது - தொன்று தொட்டது. இது வெறும் தற்புகழ்ச்சி அல்ல - உலகம் ஒத்துக்கொண்டுள்ள அறிவுகள் கண்ட தெளிவு இவை. ஆதலின் அதில் நாம் சரியான, குறைவற்ற ஆக்கம் பெறவேண்டும். எளிமையைப்போல் நம் மொழியின் கடினத்தையும் அறிந்துகொண்டே வளர வேண்டும். ஆகையால் எழுத்தும் நடையும் இத்தென்றல் ஏட்டின் இயற்கைக் கொப்பச் சற்று ஏறியதாக யிருப்பினும், அதோடு உங்களை முதலில்பழக விட்டுக்கொண்டே, பிறகு, போகப் போக அதாகவே ஒன்றிவிடுங்கள்.

சுவைக்கக் கசக்கும் மருந்து, நோயைக் களைந்து, உடலை உறுதிபடுத்தி, மூளைக்குப் பல ஊற்றுக் கண்களையும் பெருக்குமாயின், கசந்தது பலனில் எவ்வளவு கனிந்ததாக ஆகிவிடும் பாருங்கள்! அதுபோல உங்களது முயற்சியும் இருக்க வேண்டுமென்பதே எங்கள் அவா.

நாழியாகிவிட்டது. இப்பொழுது விடைபெற்றுக் கொண்டு, வரும் வாரங்களில் குட்டிக் கதையாகவோ, குறும்புப் பேச்சாகவோ, எளிய இலக்கணப் பாடலாகவோ, இனிய இசைப் பாட்டாகவோ, எப்படியோ சந்திக்கிறோம். தங்கங்களே! என்றும் சிரித்துக் கொண்டே இருங்கள். அன்பு!

★

கருத்துரை

> "எல்லாரும் கற்ற நாடே
> எல்லாம் உடைய நாடு."

மேலே உள்ள இரண்டு அடிகளும் மிக எளியவை. அனைவரும் புரிந்துகொள்ளக் கூடியவை. அவைகளைப் புரிந்து கொள்ளுமளவு போதாது. ஆனால் மனத்திலும் இறுத்த வேண்டும். பிறந்த எவருக்கும் நாட்டுப் பற்றும் உடன் பிறந்ததாக இருத்தல் அவசியம். நாட்டுப் பற்றுடைய நமக்கு, அதன் நலனில் அக்கரையும் இன்றியமையாததாக இருக்க வேண்டும். அது எப்படி? நம் நாடு குறைவில்லாத நாடாக ஆகவேண்டும். இல்லையேல், ஆக்கவேண்டும். குறைவு என்றால், ஒன்றல்ல, இரண்டல்ல, எந்தக் குறையுமே இருக்கக் கூடாது. இது முடியக்கூடியதா வென்று வினவெழுப்பிப் பயனில்லை. மேலே படித்த வரிகளை மீண்டுமொருமுறை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். அதாவது "எல்லாம் உடைய நாடு" என்றால் எதிலும் குறையிருக்காத நாடு என்று ஆகிறதல்லவா? அந்த எல்லாம் உடையநாடு எப்பொழுது உண்டாகும்? இதற்குப் பதிலும் அதிலேயே யிருக்கிறது. அதாவது 'எல்லோரும் கற்ற நாடே' என்ற பதில்தான்.

நாட்டு மக்கள் எல்லாரும் படித்தவர்களாக ஆகிவிட்டால், நாடும் குறைவற்றதாக ஆகிவிடுகிறது. அப்படிச் சிறு குறைகள் உண்டானாலும் அறிவு நிறைந்துள்ள நாட்டில், அவை நீடித்திருக்காது. அறிவின் சக்தி குறைகளை அகற்ற முயற்சிப்பதாகத் தானிருக்கும். ஆதலின் நாட்டு மக்கள் - அதிலும் சிறப்பாக நீங்கள்-கல்விப் பருவத்தினர். இவைகளை உங்கள் எண்ணங்களோடு ஒட்ட வைத்துக் கொள்ளவேண்டும்.

செல்வச் சிறுவர்களே!

ஓடுங்கள். ஓய்ந்தபோதெல்லாம் விளையாடுங்கள். அதனால் உங்களுக்குச் சுறு சுறுப்பும், அறிவு ஒளியும் அதிகமாகும். அவைகளை உங்கள் கல்விப் பெருக்கத்துக்குப் பயன்படுத்தி சோம்பலின்றி, ஊக்கக் குறைவின்றிப் படித்துக்கொண்டே யிருங்கள். படிப்பதை ஆழப் படியுங்கள். குற்றம் குறையாடின்றி படியுங்கள். படிப்ப... அறிவு ஊறும்.

> "தொட்டனைத் தூறும் மணற்...
> ...கேணி மாந்தர்...
> கற்றனைத் தூறும் அறிவு"

இது வள்ளுவர் வாய்ச் செ... நீர் எடுத்த அளவு ம... கேணி நீர் சுரப்பதைப் பே... படித்த அளவு அறிவும் ... ரும். ஆதலின் படிப்பின் அ... யத்தை உணர்ந்து படித்... கொண்டே யிருங்கள்.

மற்ற தம்பி, தங்கை, த... தாக்களுக்கும், படிப்பு வ... னையேயில்லாத அம்மா,பாட்... மற்றவர்களுக்கும் உங்களா... முடிந்த அளவு படிப்பு, பாட்... கதைகள் முதலியவற்றை... சொல்லிக்கொண்டேயிருங்கள்... அறிவைப் பிறர்க்கு அளிக்க... அளிக்க, உங்களுக்குப் பு... அறிவு விளைந்து கொண்டே... யிருக்கும்.

மற்றொரு குறளடியை ஞாப... கப் படுத்திவிட்டுக் கருத்... துரையை முடித்துக்கொள்... கிறேன்.

> "கற்கக் கசடறக் கற்பவை
> கற்றபின்
> நிற்க அதற்குத் தக."

அதாவது படியுங்கள் - கற்க... வேண்டிய நூல்களைப் பழுதில்லாமல்படித்தறியுங்கள். படித்ததில் கண்ட நன்னெறியிலே நின்று, வாழ்வை வளப்படுத்திக் கொள்ளுங்கள். இக்கருத்துரையைச் சிறுவர்களுக்குக் கூறுதல் கடமையெனக் கூறிவிட்டேன். தமிழ்த் தம்பிகளும் தங்கைகளும் கருத்துடையவர்கள் அல்லவா? அவர்கள் நல்ல கருத்துக்களை என்றும் புறக்கணிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு இதை நிறுத்திக் கொள்கிறேன்.

சிறுகதை

ஆட்டுச் சிறுவனும் நாட்டு மந்திரியும்

இது ஒரு பழைய காலத்துக் கற்பனைக் கதை. இதை எடுத்துக் கூறுவதால் ஆபத்து ஒன்றுமில்லை. நீங்கள்படித்து விட்டு, ரசிக்கக் கூடியதாயிருந்தால், உங்கள் பழைய பாட்டன் பாட்டிகளுக்குச் சொல்வதிலும் தப்பில்லை.

★

ஏதோ ஒரு ராஜா ஆண்ட காலம். அந்தக் காலத்தில் ஒரு சிறிய கிராமத்தை யடுத்து நடந்ததாக இந்தக் கதையை ஆரம்பிக்கலாம்.

அந்தக் கிராமத்தின் பெயர், 'மயிலாடும் பாறை' என்று வைத்துக் கொள்வோம். பெயர் மனத்திற்கு இன்பமாகவும். சொல்ல நாவிற்கு இனிப்பாகவும் இருக்கிறதல்லவா? உண்மையிலேயே அந்தக் கிராமம் இயற்கை எழிலுக்கு எடுத்துக் காட்டாக யிருந்தது. அங்கு தாமரைக் குளங்கள் சில. மாஞ் சோலைகள் பல. ஊர் எல்லையில் வீட்டுமிருகங்களான,பசு,ஆடு, எருமை, நாய், குதிரை போன்றவை குளிக்க வசதியானச்சில குட்டைகள். ஊரைச் சுற்றி ஓடும் வாய்க்கால்கள் வேறு. நீர் வளம் நிறைந்த காரணத்தால், நிலவளம் பெருகித் தோன்றியது.

ஊரை விட்டுச் சில மைல் நடந்தால், சிறிய பசுங் குன்றுகளும் அதில் வடியும் சுனைகளும், அந்தப் பக்கத்துச் சித்திரமாக இருந்தன. அந்தச் சிறுமலைச் சரிவில், பச்சைக் கிளிகளின் பட்டாளங்கள் அணிவகுத்து நிற்பதுபோல், பசும்புல் பரப்புக்கள் அமைந்திருந்தன.

[அடுத்த இதழில் முற்றும்]

...ர்மியத் தலைநகரில் பயங்கரக்கொலை!

6

போடுன்லா: புகை அவ்வளவு ...திகமாக இல்லாதபடியால் ...றந்து கிடந்தவர்களை நன்ருகப் ...ார்க்க முடிந்தது,

தாரவாடி ஊசான்வின்: கொலை ...டந்த அறையினுள் மறுபடி செல் ...லும்போது ஊத்தான்வின்; ...பாலீஸ் கமிஷனர், ஊஅவுங் ...ாவே, ஊபாசரன் முதலியோர் ...ளை சந்தித்தீர்களல்லவா?

போடுன்லா: ஊபாசான் நீங்க ...ாக மற்றவர்களைப் பார்த்தேன். ...-ம் நெம்பர் சாட்சி போடுன்லா ...விசாரணை சரியாக முடிவுற்றதும் ...-ம் நெம்பர் சாட்சியாகிய ஊஅவுன் ...ன் விசாரணை செய்யப்பட்டார்,

அட்வோகேட்: இவ்வழக்கு சம் ...ந்தமாக தங்களுக்கு தெரிந்தவரை தெரிவிக்கலாம்.

ஊஅவுன்கீன்: கொலை நடந்த காலை 10-மணிக்கு நான் செகரட் டேரியட் காரியாலயத்தில் பப்ளிக் ஒர்க்ஸ் இலாக்கா அதிகாரி ஊமங்வு என்பவருடன் செக்ரட்டேரியட் சீடிக் குப் பக்கத்தில் நின்று பேசிக்கொண் ...ருக்கும் பொழுது, கிலிக் கிலிக் என்ற சப்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தேன். எங்களுக்குக் கொஞ்ச தூரத்தில் பச்சை நிற மிலிட்டேரி உடை அணிந்து தொப்பியை சாய் வாகப் போட்டுக் கொண்டு நான்கு பேர் சிடியில் மேலேறிப் போகக் கண்டேன், அதில் முதல் மூன்று பேர் டாமிகன்னும், பின்னவன் ஸ்டென்கன்னும் கொண்டு போயி னர்.

அட்வோகேட்: அவர்கள் எங்கு போகப்பார்த்தீர்?

அவுன்கின்: மந்திரிசபை அறையை நோக்கிப் போகக்கண் டேன். சிறிது நேரத்திற்குள் துப் பாக்கி சப்தம் கேட்டது. இதைக் கேட்டு மக்கள் ஓடுவதைக்கண்டு, நானும் ஊமவுங் மவுங் பிரிந்து தனித்தனியாக ஓடிவிட்டோம். இவரை எதிர்தரப்பு லாயர் தாரா வாடி ஊசான்வின் குறுக்கு விசா ரணை செய்தார்.

ஊசான்வின்: கொலை நடந்த எவ்வளவு நாள் சென்று தங்களை போலீசார் விசாரணை செய்தார் கள்?

அவுன்கின்: கொலை நடந்த இரண்டு வாரத்திற்குள் இரு தடவை போலீஸ் அதிகாரியால் விசாரிக்கப் பட்டேன்.

ஊசான்வின்: கிலிக், கிலிக் என்றது துப்பாக்கி சப்தம் என்று நினைத்திரா?

அவுன்கின்: இல்லை, துப்பாக் கியை முடுக்கும் சப்தம் மாதிரி தெரிந்தது.

இவருடைய விசாரணை 3-20-க்கு முடிவுற்றதும் 8-ம் நம்பர் சாட்சி யான ஊமவுங்மவுங் விசாரணை செய்யப்பட்டார்.

அட்வோகேட்; ஊமவுங் மவுங் அவர்களே, தாங்கள் ஜூலை 19-ந் தேதி செக்ரட்டேரியட்டில் இருந் தீரா?

ஊமவுங் மவுங்: ஆம், அன்று காலை நான் செக்ரடேரியட்டில் 10 மணி சுமாருக்கு ஊஅவுன்கினு டன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது கிலிக், கிலிக் என்ற சப்தம் கேட்டு திரும்பிப் பார்க்குப்போது 4 பேர் பச்சை நிற ராணுவ உடை யுடன் டாமிகன், ஸ்டென்கன் முத லியவைகளுடன் எங்களுக்கு 7, 8 அடி தூரத்தில் சீடிமேல் ஏறி வலது பக்கம் போகப் பார்த்தேன். அவர் களின் தோள்பட்டையில் 12-வது ஆர்மினுடைய சின்னம் தொங்க விடப்பட்டிருந்தது. அவர்கள் போய் சிறிது நேரத்திற்குள், துப்பாக்கி சப்தம் கேட்டது. இதைக்கேட்டு நான் மறுபக்கம் ஓடிவிட்டேன்.

[மிஸ்டர் வெர்ட்டானஸ் குறுக்கு விசாரணை]

வெர்டானஸ்:- இந்த மாதிரி துப் பாக்கி கொண்டு 'கிலிக்கிலிக்' என்ற சப்தத்துடன் வருவது எப்பொழுதா வது உண்டா?

ஊ மவுங் மவுங்:- எப்பொழுதும் அப்படி இல்லை.

வெர்ட்டானஸ்:- அப்படியானல் நீங்கள் சந்தேகப்பட்டிருக்கலாமே.

ஊ மவுன் மவுங்:- ஆம், சிறிது சந்தேகந்தான்.

வெர்ட்டானஸ்:- வந்தவர்கள் தொப்பியால் முகத்தை மறைத் திருந்தார்களா?

ஊ மவுன் மவுங்:- அப்படி ஒன் றும் மறைத்துப் போனதாகத் தெரிய வில்லை.

நீதிபதி:- ஆயுதங்கள் கொண்டு வந்ததால் தங்களுக்குச் சந்தேக மேற்பட்டதா?

ஊ மவுன் மவுங்:- ஆம், அவர் கள் ஆயுதங்களுடன் சிறிது வேக மாகச் செல்வதைப் பார்த்து எனக்கு சந்தேகந்தான்.

நீதிபதி:- சந்தேகப் பட்டதால் அவர்கள் பின் சென்று பார்க்க வில்யா? ஊம்வுன் மவுங் - இல்லை!

17--10--47ல் இன்சீன் ஜெயிலில் மந்திரி மார்கள் கொலைவழக்கு சம் பந்தமாக நான்காவது நாள் விசா ரணை ஆரம்பமாயிற்று.

முதன் முதலாக சட்டசபைக் கூட் டத்தின் உதவிக் காரியதரிசியா கிய ஊடீன்ஒவ் விசாரிக்கப்பட்டார். விசாரணையின் போது, அவர், 19-10-47 அன்று தானும் மந்திரி சபைக் கூட்டத்திற்கு வந்திருந்த தாகவும் மந்திரி சபைக்கு பக்கத்து அறையில் 10 மணிக்கு உட்கார்ந் திருந்ததாகவும் சொன்ஞர். அவர் தான் இருந்த அறையில் மவுன் மவுன் என்பவருடன் பேசிக் கொண் டிருந்த பொழுது மந்திரி சபை அறையில் கூட்டம் நடந்து கொண் டிருந்ததாகவும் அப்போது சிலபேர் பூட்ஸ் காலுடன் நடந்துவரும் சப் தம் கேட்டு ஜன்னல் வழியாகப் பார்த்ததாகவும் 3 4 பேர் வடக்கு நோக்கி, ஆயுதங்களுடன் செல்வதை மவுங் அவுங்கிடம் காண்பித்து வெளி யில் வந்ததாகவும், அப்போது ஆயு தந் தாங்கியவர்கள் சபை அறைக் காவலாளியாகிய கொத்தவுன் செய்ன் என்பவனை கீழே தள்ளி விட்டு பலாத்காரமாக கதவைத் தள்ளி அறையினுள் நுழைந்த தைப் பார்த்ததாகவும் சொன்ஞர்.

அட்வகேட், பிறகு என்ன நடந் தது. என்று கேட்டதற்கு, ஊடீன் ஒவ் சொன்னதாவது, மந்திரி சபை யில் குண்டுப் பிரயோகம் நடந்தது என்றும் இதைக் கேட்டவுடன் தான் ஊசுவேபோ. அறைக்கு ஓடி விட்ட தாகவும், மறு படி 5 நிமிடம் சென்றுமந்திரிசபை அறையை பார்க் கும் பொழுது போஜோவ், ஊ ஒன் மவுங் கீழே விழுந்து இறந்து கிடந்த தாகவும், தக்கீன்மியா நாற்காலி யின் கீழ் உயிரற்று உட்கார்ந்திருக் கக் கண்டதாகவும், ஊபாச்சோ, ரஜாக், ஊபாவின், மான் பரக்கைன் ஆகியோர் நாற்காலியில் அமர்ந்த படியே உயிர் நீத்திருந்ததாகவும்; உடனே தான் தண்ணீர் கொண்டு வந்து கைத் துண்டினுல் நனைத்து மைன் பூன் சோபுவா விற்குக் கொடுத்ததாகவும் அப்போது போடுன்லா, போலீஸ் கமிஷனர், சிறிதுநேரம் கழித்து போலீஸ் அதி காரி உலாப்பே முதலியோர் வந்த தாகவும் உலாப்பே அங்கு கிடந்த குண்டுகளை எடுத்துக் கொண்டு தன் னைச் சாட்சியாக ஓர் கடிதத்தில் கை யெழுத்து வாங்கினதாகவும் சொன் ஞர்-

அட்வகேட், ஊடின் ஒவை லண்டன் சென்றிருந்த கோஷ்டி யுடன் அவரும் சென்றிருந்தாரா என்று கேட்டபோது, ஊடின் ஒவ் போஜோ தலைமையில் லண்டன் சென்ற தூது கோஷ்டிக்கு தான் உதவிக் காரியதரிசியாகச் சென்ற தாகவும், ஆலோசகராக ஊபாயின், பேர்செட்கா, தக்கீன்சிட், சோஞய்கா ஆகியோர் வந்திருந்ததாகவும், அவுன் சான்- அட்லி ஒப்பந்தத்தில் பர்மா சார்பாக ஊ அவுன் சான், தக்கீன் மியா, ஊபாப்பே, ஊடின் டுட் ஆகிய நான்குபேரும் கையெழுத் திட்டதாகவும், உடன் வந்திருந்த ஊசோ, தக்கின் பாசெய்ன் கையெழுத்திட வில்லை யென்றும் தான் உடன் இருந்ததாகவும் சொன்ஞர்.

இத்துடன் இவர் விசாரணை 11 மணிக்கு முடிவுற்றது ஸடெஞ இராப்பர் மவுங் விசாரிக்கப்பட்டார். கொலை சம்பந்தமாக அவருக்கு என்ன தெரியும் என்று அட்வகேட் விசாரித்தபோது தான் அன்று காலை 10 மணிக்கு மந்திரி சபைக் கூட்டம் நடைபெறும் பொழுது, ஊ டீன் ஒவ் உடன் பேசிக் கொண்டு மந்திரி சபை அறைக்குப் பக்கத்து அறையில் இருந்ததாகவும், அப் போது ஆயுதந்தாங்கிய 4 பேர் 12 வது இராணுவ உடை தரித்துப் போவதைப் பார்த்து வராண்டா விற்கு வந்துபார்த்ததாகவும், நாலு பேர் அறையினுள் பலாத்காரமாய் நுழைவதைப் பார்த்து, தன்னுடன் இருந்தவரிடம் சொன்னதாகவும் உடனே துப்பாக்கிப் பிரயோகம நடை பெற்றதாகவும் சொன்ஞர்.

(தொடரும்)

மதுரை மாவட்ட இரண்டாவது

தி.மு.க. சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

மதுரை ஆரம்பாளையத்தில் சௌந்திரபாண்டியனுர் திடலில்
1955 ஜனவரி 8, 9, தேதியில் நடைபெறும்.

சனி 8—1—55	ஞாயிறு 9—1—55
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்	தலைவர்
சத்தியவாணிமுத்து	கலைஞர். மு. கருணநிதி
திறப்பாளர்	திறப்பாளர்
தில்லைவில்லாளன் M. A.,	எம். பி. சுப்பிரமணியம் B. A. M. L. A.

அறிஞர் அண்ணு

நாவலர் நெடுஞ்செழியன் எம்.ஏ, ஈ. வி. கே. சம்பத், க. அன்பழகன் எம்.ஏ. இரெ. இளம்வழுதி, எம்., ஏ. பி. எல், என். வி. நடராசன், கண்ணதாசன், எ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ, அரங்கண்ணல், கே.ஆர்.இராமசாமி, அருண்மொழி பி.ஓ.எல்., ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கி. மனோகரன் பி.ஏ., டி.கே.சீனிவாசன், சி.பி.சிற்றரசு, அ.பொன்னம்பலனுர்,காஞ்சி கலியாணசுந்தரம், K.A. மதியழகன், B.A., வி. எம். ஜான். முதலியோர் கலந்து கொள்வார்கள்.

இரு நாட்களிலும் நடிப்புச் செல்வர் இராசேந்திரன்
புரட்சி நடிகர் இராமச்சந்திரன் குழுவினர்
அளிக்கும் நாடகங்களுண்டு.

வரவேற்பாளர் ரூ. 5 பிரதிநிதி ரூ. 2 பார்வையாளர் ரூ.1
பெண்கள் அணு 8.

பொருளாளர்: எஸ். வி. தொந்தி

தொண்டர்படைத் தலைவர் எஸ். எஸ். இராசேந்திரன்

செயலாளர்:
எஸ். முத்து, அய்யாசாமி.

முத்தமிழ்ப் பித்தன், இடையநல்லூர்

தென்றலாரே! தமிழில் புலமை பெற வேண்டுமென்பது எனது நெடுநாளைய விருப்பம். ஆசிரியரிடம் சம்பளம் கொடுத்து கற்கக் கூடிய அளவுக்கு எனது ஏழ்மை இடங்கொடுக்கவில்லை. இந்நிலையில் என் விருப்பம் நிறைவேற வழி உண்டா?

உண்டு! கண்ணில்படும் இலக்கியப்பத்திரிகைகளை நண்பர்களிடம் கேட்டாவது பெற்று தொடர்ந்து படியும். நிறைய இலக்கியப் புத்தகங்கள் படியும். படித்ததை சுவையாகப் பிறருக்குச் சொல்லப்பழகும். பிறகு புலமை தானுகவே வந்துவிடும். "கண்டது கேட்கப் பண்டிதன் ஆவரான்!" எனும் பழமொழியை நீர் கேட்டதில்லையா? சுவையான சங்க இலக்கியம் கற்க, தோழர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் 'மன்றம்' இதழைத் தொடர்ந்து படித்து வரவும்.

◉

அ. அங்கமுத்து, அரியலூர்

தொன்மைத் தமிழகம் பற்றி முழு ஆராய்ச்சிகளுடன் கூடிய நூல் ஏதேனும் உண்டா? யாது அது?

முழு ஆராய்ச்சியும் இதுதான் என்று வரையறுத்து முடிவு கட்டிய நூல் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. திரு ந.சி. கந்தையாபோன்ருரின் நூற்கள் பெரும் பாலும் ஆராய்ந்து கூறியுள்ளன.

◉

மா. ஆறுமுகம், மைலாப்பூர்

'கொலைவாளினை எடடா, மிகு கொடியோர் செயல் அறவே" என்பதில் அறவே என்பது சரியா, அரவே என்பது சரியா?

'அறவே' என்பதுதான் சரி. 'அற்றுப்போகவே' என்னும் பொருள் தரும் அது.

◉

கே. ராசேந்திரன், பிரம்பை

தென்றலாரே! சேரன் செங்குட்டுவன், இராசேந்திரன் இவ்விருவரும் எப்பொழுது வாழ்ந்தனர்? அவர்கள் செய்த போர்கள் யாவை?

சேரன் செங்குட்டுவன் காலம், கடைச் சங்க காலம் என்கின்றனர் சில ஆராய்ச்சியாளர்கள். இக் கடைச்சங்க காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டெனச்சிலரும்கி. பி. நான் காம் நூற்றுண்டெனச்சிலரும் கூறுகின்றனர். சேரன் செங்குட்டுவன், ...ன் தாயாகிய நற்சோணைக்குச் ...மைத்த சிலையைக் கங்கை நீராட் ...க் கொண்டு சென்றபோது, அங்கு ...திர்த்த ஆரியமன்னரோடு போரிட் ...ன்; ஒன்று. அடுத்து, கொங்கர் ...சங்களத்துச் சோழ பாண்டியர் ...ள எதிர்த்து, அவர்களது கொடு...ரை நாசம் செய்தான்; (கொடு...ர், மைசூர் ராச்சியத்தின் ஒரு ...குதி) இரண்டு. மௌரிய மன்னன் ...ுகைக்கு உதவியாக, மோகூர்ப் ...ழையனை எதிர்த்து வென்றுன்; மூன்று. மற்றும், வியனூர், நேரிவாயில் முதலிய இடங்களிலும் வெற்றிபெற்றுன். அதன்பின் கல் சுமக்கவைத்தான், கசடர்களை! இது நாடறியும்!

இராசேந்திரன் காலம் பதினேராம் நூற்றுண்டு. இவன் பொருதிய போர்கள் கணக்கிலடங்கா. இவனது வெற்றிகளில் தலையாயவை, கடாரம் கொண்டதும் கங்கை கொண்டதுமாகும். மற்றும்,

"நெடிதிய லூழியுள் இடைதுறை நாடும்
தொடர்வன வேலிப் படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதில் கொள்ளிப் பாக்கையும்
நண்ணரு முரண மண்வணைக் கடக்கமும்"

கொண்டதும்,

"தெண்டிரை ஈழ மண்டல முழுதும்"

கொண்டதும்,

"பிடியல் இரட்டபாடி ஏழரை"

கொண்டதும் குறிப்பிடத் தக்கனவாகும். இவை, முறையே இடைதுறைநாடு, வனவாசி (மைசூரின் வடமேற்கு), கூல்பாக் (ஐதாராபாத்துக்கு வடகிழக்கு), மான்யகேடம், இலங்கை, சளுக்கிய நாடு எனப்படுவன. மற்றும் இவன், சரித்திரத்திலேயே போர் புரிவதில் 'பெருங்கணக்குக்'க் காட்டியுள்ள வனுயிருக்கிறுன்.

◉

எழில்மன்னன், கோல்லைக் கோம்பை

'சிப்பாய்' என்பது தமிழ்ச் சொல்லா? புரட்சிக் கவிஞர் அதைக் கையாண்டுள்ளார்; அண்ணுவின் வேலைக்காரியிலும் அது வந்துள்ளதே!

அது தமிழ்ச்சொல் அல்ல; உருமாறிவந்தஉருதுச்சொல் எனச்சிலர் கூறுகின்றனர். புரட்சிக் கவிஞர், சில இடங்களில் மணிப்பிரவாள நடையிலும் எழுதியுள்ளரார். ஆகவே 'சிப்பாய்' வர நியாயம் இருக்கிறது. அண்ணு அவர்களின் சொர்க்கவாசல் கதை நடக்கும் காலத்தில், 'சிப்பாய்' தமிழில் புகுந்து விட்டது.

◉

ரு. துரை, சுல்தான்பேட்டை

"அதிர்ஷ்டம்" தமிழ்ச்சொல்லா வடமொழிச் சொல்லா? அது வடமொழிச் சொல் என்றுல், நேரடியான தமிழ்ச் சொல் எது?

'அதிர்ஷ்டம்' தமிழ்ச் சொல் அல்ல! 'அதிர்ஷ்டம்' என்கிறமூட நம்பிக்கையே தமிழன் பண்பாட்டில் இடையாது! ஆகவே நேரடியான தமிழ்ச்சொல்லும் கிடையாது!

◉

வி. ரத்தினசாமி, திருவல்லிக்கேணி

'கம்பராமாயணம்' எழுதிய கம்பன், பார்ப்பனக் கவிஞு? இல்லையேல், ஆரியம் தாங்கிய அக் காவியத்தை அவன் எழுத ஏற்பட்ட சமய சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏதேனும் உண்டா?

பார்ப்பனர்கள் மட்டும்தான் ஆரியத்தை வளர்க்கிருர்கள் என்ருநீர் கருதுகிறீர்? அவர்களைக் காட்டிலும் விடணர்களுக்குத்தானே அக்கரை அதிகம்! கம்பன், இராமாயணம் எழுதியதற்கு சூழ்நிலை பாதகமாக இருந்ததாகத்தான் சில வரலாறுகள் கூறுகின்றன. இராமாயண அரங்கேற்றத்தை வாணியன் தாதன் என்பான் தடுத்ததாகவும், பிறகு கம்பன் அதை திருவரங்கத்தில் அரங்கேற்றியதாகவும் கூறப்படுகிறது. இராமாயணம் எழுதியதற்கு, கம்பனது விடண குணம் ஒன்றே காரணமாய் இருந்திருக்கிறது. பயந்து பயந்து தான் கம்பன் இராமாயணத்தை எழுதியுள்ளான் என்பதை, அவை அடக்கத்தில் அவன் கூறும்,

"ஆசைபற்றி அறையல் உற்றேன்"

என்பதும்,

"முத்தமிழ்த் துறை
யில்முறை போகிய
உத்தமக் கவி
கட்கோன் றுணர்த்துவன்
பித்தர் சொன்னவும்
பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும்
பன்னப் படுவதோ!"

என்று, தன்னை பித்தனுக, பேதையாக, பத்தனுக ஆக்கிக் கொண்டு "இதை ஆராயாதீர்கள்!" என்று சாடையாகக் கேட்பதும் நமக்கு புலப்படுத்தும். [அது சரி; தோழரே! பத்திரிகையில் விளம்பரத்தைக் குறைக்கச் சொல்லியிருக்கிறீரே, விளம்பரம் இல்லாமல் பத்திரிகை எப்படி ஐயா நடக்கும்! நீரே யோசித்துப்பாரும்.]

◉

திருமலை, குளித்தலை

நண்பரே! 25-12-54 தென்றலில் "சொல்லித் தெரிவதுண்டோ மன்மதக் கலை" என்பது பாரதிதாசன் வரியெனக் கூறியுள்ளீர். அதுபாரதியின் வரியல்லவா?

பாரதியின் வரி, "சொல்லித் தெரிவதில்லை" என்பது; பாரதிதாசன், கவிமுறைப்படி அதை எடுத்தாண்டு, ஒரு சிறு பாடலைச் சொன்னுர். அதில் "சொல்லித் தெரிவதுண்டோ" என்று குறிப்பிட்டார். கவிஞருக்கு எழுதிக் கேளும்; சொல்வார்.

◉

கன்னியப்பன், திருமால்பூர்.

களவு மணத்திற்கும் காந்தர்வ மணத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன? இரண்டின் தத்துவம் யாது?

இரண்டும், ஒரே கருத்துக் கொண்டவை என்றே நினைக்கிறேன். முன்னது தமிழ்ப் பண்பில் வந்தவார்த்தை; பின்னது, அதன் பகைப்பண்பில் வந்த வார்த்தை. இரண்டுமே, தலைவனும் தலைவியும் தனிப்படக்கண்டு, தாமே முடிவு கொண்டு, கலத்தலைக் குறிக்கும். வேற்றுமை: முன்னது இயற்கையோடியைந்த வார்த்தை; பின்னது அதீதமும் கலந்த வார்த்தை.

◉

ப. போ. சாமி, சென்னை-7

மனுவிலிருந்து குறள் வந்ததாக வையாபுரிப்பிள்ளை சொல்வது சரியா? (வையாபுரியாரின் கட்டுரையை நண்பர் கத்தரித்து அனுப்பியுள்ளார். ஆ-ர்.) உதாரணங் காட்டியிருப்பதால் நம்ப வேண்டியிருக்கிறதே?

கடுகளவு அறிவுடையோரும் வையாபுரியாரின் கூற்றை 'கடைந்தெடுத்த மடமை' எனக் கூறி விடுவர். உதாரண... ...ாட்டுவது என்ருல் எதற்கு காட்டமுடியாது? ஆங்கில நாட்டு சார்லசுக்கு பிறந்தவர், தமிழ் நாட்டு கம்பர் என்று கூறி, உதாரணமாக, இருவருக்கும் கால்கள் இரண்டே எனவும் மூக்கு ஒன்றே எனவும் கூறிவிடலாம்! இந்த 'விடண'த்திற்காகத் தான், வையாபுரியார், வள்ளுவன் காலத்தை ஆரும் நூற்றுண்டிற்கு இறக்கிக் கொண்டு வருகிருர்! ஒரு சில பகுதிகளில் ஒற்றுமை காணப்படுவதாலேயே ஒன்றிலிருந்து மற்றென்று பிறந்தது அல்லது அதை இது தழுவியது என முடிவு கட்டிவிட முடியாது. ஒரே கருத்து வேறு வேறு காலங்களில் இருவருக்குத் தோன்றியிருக்க முடியும்.

◉

டி. இராசன், தேவகோட்டை

ஐயா தென்றலாரே!

சிவாஜி கணேசன் திருப்பதிக்குச் சென்று வெங்கடாசலபதிக்கு காணிக்கை செலுத்தி பக்தியோடு வணங்கினராமே! அவருக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? இல்லை, தி. மு. கழகத்திலிருந்து விலகிவிட்டாரா?

இதுபோன்ற கேள்விகளை நண்பர்கள் தயவுசெய்து கேட்கவேண்டாம்.

★

கண்ணதாசன்

சுற்றுப்பயணம்

★

ஜனவரி 8	மதுரை சமூக சீர்த்திருத்த மாநாடு
,, 9 —	மதுரை அரசியல் மாநாடு
,, 10 —	திருவல்லிக்கேணி (நபிகள் விழா)
,, 13 —	சிந்தாதிரிப்பேட்டை (நாடகத் தலைமை)
,, 14 —	சென்னை பொங்கல் விழா
,, 16 —	ஆலந்தூர் தி.மு.க. ஆண்டு விழா
,, 17 —	இராயபுரம் பொதுக் கூட்டம்
,, 22 —	மதி வளர்ச்சி மன்றம் சூளை.
,, 23 —	காலட்சேபம் (கண்ணகி கதை)
,, 26 —	பெரம்பூர் கலை வளர்ச்சி மன்றம்
,, 27 —	ஏகாம்பர குப்பம் (சித்தூர் மாவட்டம்)
,, 30 —	சிதம்பரம் பொதுக் கூட்டம்
பிப்ரவரி 2 —	கடலூர் (காலை திருமணம் மாலை பொதுக்கூட்டம்)
,, 3 —	அயன்புரம் பாரதிதாசன் நூல்நிலையம்
,, 6 —	இராயப்பேட்டை திருமணம்
,, 25 —	பிள்ளாதுரை திருச்சி மாவட்டம்

கலைஞர் மு. கருணாநிதி

அவர்கள், கண்களில் ஏற்பட்டுள்ள கோளாறின் காரணமாக சென்ற சிலநாட்களாக படுக்கையில் கிடக்கிருர். கண்களைத் திறக்கவும் முடியாத நிலையில் வருந்துகிருர். தற்பொழுது டாக்டரின் சிகிச்சை பெற்று வருகிருர். இன்னும்சிலமாதங்கள் ஓய்வுபெறவேண்டும் என்றும் டாக்டர் கூறியுள்ளார்.

பிப்ரவரி முதல் தேதியன்று வெளிவருகிறது!

தென்றல்

★ திரை ★

இது - தென்றல் தரும் ஏடு!

இது - திரைவானில் ஒரு பூக்காடு!

இது - தித்திக்கும் செய்தி தரும் தேன்கூடு!

இது - வண்ணப் படங்களுடன் கண்ணைக் கவரும் கலை வீடு!

★ இதுவே முறையான திரை! ★

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muthu Mudali St., Madras-14.